★ விலை ரூபா 1-00

ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 | ஆடி 3 | ஷவ்வா 8 | இதழ் 158

யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 19—7—83

"உபதபாலகங்களை உடைப்பது உகந்ததல்ல"

இளைஞர்களுக்கு 'அமிர்' வேண்டுகோள்

(மாவிட்டபுரம்)

"உப-தபால் நிலையங்களை அடித்து உடைப்பது உகந்த தல்ல. ஒரு உப-தபால் நிலையத்தைப் பெறுவதானால் எவ்வளவோ கஷ்டப்பட வேண்டி இருக்கும். இதனால் மக்களுக்கும் கஷ்டம். இப்படியான வேலைகளில் ஈடுபடவேண்டாம் என இளைஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

தையிட்டி கலைமகள் சனசமூக நிலைய ஆண்டு விழாவில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இ. கந்தையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"ஆட்சியாளர்களின் அடக்குமுறையினாலும், எதேச்சாதிகாரப் போக்கினாலும், எமது மக்கள் இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். வன்

(8-ம் பக்கம் பார்க்க)

'தமிழ் ஈழவிடுதலை புலிகளின்' சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மீசாலையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி மரணமான இரு இளைஞர்களுக்கும் அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகள் சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஒட்டப்பட்டிருந்தன.

'தமிழ் ஈழ விடுதலைப்புலிகள்' என்றழைக்கப்படும் இயக்கத்தினரால் எழுதப்பட்டதான இச்சுவரொட்டிகளில் 'தமிழ் ஈழ வேங்கைகளான 'சீலன்', 'ஆனந்தன்' ஆகியோருக்கு எமது கண்ணீர் அஞ்

(8-ம் பக்கம் பார்க்க)

"மன்னர் மாநாட்டுக்கு' வருபவர்கள்

தேசிய அடையாள அட்டை

கொண்டுவர வேண்டும்!"

தாமதத்தைத் தவிர்க்க 'அமிர்' ஆலோசனை

(மன்னர் நிருபர் சி. தர்மகுலசிங்கம்)

"வீதிகளிலும், வீடுகளிலும் சோதனைக்குமேல் சோதனை நடத்தப்படுவதால், மன்னரில் நடைபெறும் எமது மாநில மாநாட்டுக்கு வரும் பேராளர்கள், பார்வையாளர்கள் தாமதங்களைத் தவிர்க்கக் கூடியதாகத் தமது தேசிய அடையாள அட்டையைக் கொண்டுவருமாறு வேண்டுகிறேம்".

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும், எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று இங்கு வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மாநில மாநாட்டு ஏற்பாடுகளைக் கவனிக்க இங்கு வந்துள்ள திரு. அ.அமிர்தலிங்கம், அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது "இளைஞர்கள் ஆயுதப்படையின் கெடுபிடிகளுக்குள்ளாகியுள்ளனர். வீடுகளிலும் வீதிகளிலும் சோதனைக்குமேல் சோதனை நடக்கிறது. இந்த நெருக்கடியான காலகட்டத்தில் நமது மாநில மாநாடு வரும் 23,24ம் திகதிகளில் மன்னரில் நடக்கிறது. மகாநாட்டுக்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வரும் பேராளர்கள், பார்வையாளர்

(8-ம் பக்கம் பார்க்க)

முக்கிய அறிவித்தல்

தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளின் காரணமாக 'ஈழநாடு' நாள் இதழின் விலை நாளையதினம் (20-7-1983) தொடக்கம் -/25 சதத்தால் அதிகரிக்கப்படுகின்றது என்பதை அறிவித்துக் கொள்கின்றோம்.

— நிர்வாகி.

புதைக்கப்பட்ட சடலத்தை மீண்டும் தோண்டி எடுக்க பரு. நீதவான் பணிப்பு

(டிலோலி)

குடத்தனை பகுதி வயல்வெளி கிணற்றிலிருந்து மீட்கப்பட்டு, மரணவிசாரணையின் பின் புதைக்கப்பட்ட இளைஞனின் சடலத்தை மீண்டும் தோண்டி எடுக்குமாறு யாழ்ப்பாணம் வைத்திய அத்தியட்சகரை, பருத்தித்துறை நீதிவான் திரு. கணபதிப்பிள்ளை பணித்துள்ளார்.

வல்வெட்டித்துறையை சேர்ந்த சோதிலிங்கம் முத்துலட்சுமி நீதிமன்றத்தில் நேற்று இறந்தவரின் மோதிரம், கைக்கடிகாரத்தை பார்த்து அவை தன்மகன் சோமசுந்தரத்தினுடையதென அடையாளம் கூறினார்.

இறந்தவரின் தாயார் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். சிறிசிவாயா, என். கிருஷ்ணராஜா, ஆர். டி. ரத்தினசிங்

(8-ம் பக்கம் பார்க்க)

திருமண அழைப்பு

மணமகன்: பொன். சத்தியபாலன் (லண்டன்)

மணமகள்: கந்தையா உலகநாயகி
(கமநலசேவைத் திணைக்களம், கொழும்பு)

இடம்: யாழ். பழம்நேட் சித்திவிநாயகர் கோவில்

காலம்: 20-7-83 புதன்கிழமை காலை 9-10 மணி

உறவினர்களும், நண்பர்களும் இவ்வழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ வரவேற்பு: பிற்பகல் 3 — 5 மணி
மணமகன் இல்லம்,
கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

க. செல்வராசாவும் பாரியாரும்,
சி. சந்திரசேகரமும் பாரியாரும்,
'சந்திரோதயம்'
(புகையிரத நிலைய முன்பாக),
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

S.V.P. சிவரத்தினமும் பாரியாரும்,
திருமதி தயா. செல்வநாயகம்,
பொன். தர்மபாலன்
'செல்வம்'
123, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(8023)

இ. போ. ச. - தனியார் பஸ்கள் மோதல் சாரதியும், பிரயாணி ஒருவரும் பலி! பெண்கள் உட்பட மூவருக்குக் காயம்

(மன்னர்)

மன்னரிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றுடன் புத்தளத்தில் மோதிக்கொண்டதில் சாரதி ஸ்தலத்திலேயே மாண்டார்! பெண்களுட்பட மூவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கு ஒருவர் மரணமானார்.

நேற்று முன்தினம் இரவு 10-00மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது,

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். மாவட்டத்தில் எரிபொருட்களின் சில்லறை விலை அதிகரிக்கப்படும்?

ரயில் சேவை ரத்தின் எதிரொலி

(யாழ்ப்பாணம்)

எரிபொருட்கள் ரயில் மூலமாகவன்றி வீதியினூல்வாகனம் மூலம் கொண்டு வரவேண்டியிருப்பதால், டீசல் பெற்ரோல் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் தற்போதைய சில்லறை விலையினும் பார்க்க சில்லறை வியாபாரிகளுக்கு வழங்க வேண்டிய விலை கூடுதலாக இருக்கும். ஆதலால் ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும்வரை சில்லறை விலையில் தற்காலிக மாற்றம்செய்ய வேண்டியிருக்கிறது. தற்போதைய சூழ்நிலையில் எரிபொருட்களின் சில்லறை விலை பற்றி செய்யப்பட்டுவரும் மதிப்பீடு விரைவில் விரிவாக அறிவிக்கப்படும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா உள்ளூர் திணைக்களங்களுக்கு நேற்று அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் மேற்

(8-ம் பக்கம் பார்க்க)

சிறியோர்கள்
பெரியோர்கள்
பெண்களுக்கு

பொழுதுபோக்கிற்கு T. V. GAMES நிபுவிக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்,
ரி. வி. கேம்ஸ்

20 விளையாட்டுக்கள் - முற்றிலும் குளிரூட்டப்பட்ட ரி. வி. திடல்
1-00, -/50, -/25 சதம் மட்டுமே

23, மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம். [8003]

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

பரந்தன் D, ஐந்தாம் வாய்க்கால் என்னுமிடத்தில் 7 ஏக்கர் நெற்காணி இரு போகம் செய்யக்கூடிய நீர்ப்பாசன வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு செ. அம்பிகை பாலன், சட்டத்தரணி, ஜே. பி. யூ. எம். 9, கண்டி வீதி, சாவகச்சேரி, தொலைபேசி: 262. 7963

அஸ்டின் 40 பரீலு மொடல் 4 ஸ்பீட் தொடர் இலக்கத்தை உடையதும் ஒரு கலன் பெற்றோலுக்கு 45 மைல் ஓடக்கூடியதுமான கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. A. பரமானந்தம், 333, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 7996

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் கொழும்புத்துறை வீதியில் முன்று பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. தம்பிஐயா, சோதிடவிலாசபுத்தகசாலை, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம். 8006

தேவை

வீட்டு வேலைக்கு உடன் (35-40வயதுக்கிடையில்) பெண் உதவியாள் தேவை. செ. சற்குணானந்தன், 27, அராலி வீதி, யாழ்ப்பாணம். 8013

கார் விற்பனைக்கு

புதிய, பதியப்படாத குளிரூட்டப்பட்ட Mitsubihsi Lancer S. L. (Box Model) கார் விற்பனைக்குண்டு. தேவராஜா, 265, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 8022

நெடுந்தீவிலிருந்து பசுமாடுகள் வெளியேறத்தடை

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் இருந்து பசுமாடுகளை வெளியிடங்களுக்கு ஏற்றுவது தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கான தீர்மானம் நெடுந்தீவுப் பிரதேசசபையில்நிறைவேற்றப்பட்டுள்ளது. கூட்டத்திற்கு நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் திரு வே. சுந்தரலிங்கம் தலைமை வகித்தார். (அ)

யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற்
Yarl Chinese Restaurant

பலரின் வேண்டுகோளுக்கு இணங்க பகல் போசனப் பார்சல் விநியோகிக்கப்படும். பார்சல் பகல் 11-30 மணிதொடக்கம் 1 மணி வரை வழங்கப்படும்.

ஒரு பார்சலின் விலை ரூபா 15/– மட்டும்.

யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற்
124, R. R. நல்லையா வீதி,
யாழ்ப்பாணம். 8021

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

நம்பிக்கைச் சொத்துச்சட்டம் அத்தியாயம் 87-ம் பிரிவு 42-புத்தகம் 3ன் கீழ் செய்யப்படும் விண்ணப்ப விடயத்தில் வைத்திலிங்கம் மாணிக்கவாசகர், 78/1, வாட் பிளேஸ், கொழும்பு - 7,

மனுதார்

எதிர்

1. சி. விமலநாதன் மானிப்பாய்.
2. இராமநாதன் பரஞ்சோதிநாதன் 47, ரெம்பிளர் ரோட், மவுன்லவினியா.
3. தனபாலசிங்கமும் பெண்
4. நாகேஸ்வரியும், புக்கைதின்னிபிள்ளையார் கோயிலடி ஆனைக்கோட்டை
5. சுப்பன் செல்லன் நவாலி மானிப்பாய்

எதிர்வாதிகள்

நம்பிக்கைச்சொத்து வழ. இல: 91ன் கீழ் ஆனைக்கோட்டை நவாலி மானிப்பாயில் உள்ள தர்மசாதன காணிகளை விற்பதற்கான அறிவித்தல்.

மேற்படி நம்பிக்கைச் சொத்துக்கு சொந்தமான கல்வளவு நில. பர. ஏறத்தாள 3½. மாதக்கை வயல்நெல். பர. 34 குளி 1 பிள்ளையார் கிணற்றடி வளவு நில. பர. 13 குளி 1. 18 மேற்கூறப்பட்ட இம்மூன்று காணிகளையும் விலைமதிப்பீட்டாளரின் அறிக்கைக்கு இணங்க அதில் பல வருடங்களாக குடியிருப்பவர்களும், குத்தகை செய்பவர்களும், மேற்பார்வை செய்பவரும் அறுதியாக வாங்கமுன்வந்தார்கள் என இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது. மேலும் இவ்வழக்கில் அக்கறை உள்ளவர்கள் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

நீதிமன்றக்கட்டளைப்படி

தா. குலஞானம்
பதிவாளர்.
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

செல்வி அ. செல்லத்துரை
சட்டத்தரணி,
அயோத்தி ஆனைக்கோட்டை. 8018

'கொத்தணிப்பாடசாலைமுறை: கல்வியில் ஒரு மறுமலர்ச்சி

கிளிநொச்சியில் வடமாநில கல்விப் பணிப்பாளர்

(கிளிநொச்சி)

''கொத்தணி பாடசாலை முறை கல்வியில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வடக்கில் ஆரம்பிக்கப்பட்ட இரு கொத்தணி பாடசாலை அமைப்பும் பெருவெற்றியையும் ஈட்டியுள்ளது. இதற்காக நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.''

இவ்வாறு கிளிநொச்சி கொத்தணிப் பாடசாலைகளின் பொருட்காட்சி வைபவத்தில் பிரதமவிருந்தினர்களில் ஒருவராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளைகுறிப்பிட்டார்.

கொத்தணி அதிபர் இரா. சின்னத்தம்பி தலைமையில் கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இப்பொருட்காட்சியை திரு. வி. ஆனந்த சங்கரி எம். பி. சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

கொத்தணி அமைப்பில் உள்ள எட்டு பாடசாலைகள் ஒருங்கிணைந்து இப்பொருட்காட்சியை ஏற்பாடு செய்திருந்தன.

கொத்தணி அமைப்பின் செயலாளர் திரு. ஏ. கே. இராசேந்திரம் பேசுகையில்:- கிளிநொச்சியில் கொத்தணி முறை ஆரம்பிக்கப்பட்டது இப்பகுதிக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். கொத்தணி அதிபரும் இவ் அமைப்பில் உள்ள ஏனைய பாடசாலைகளின் அதிபர்களும் ஒரே குடும்பம் போல் எவ்விதவேற்றுமையும் இன்றி ஒற்றுமையாக செயல்படுவதே இதன் வெற்றிக்கு காரணமாகும் என்றார்.

புங்குடுதீவு கொத்தணி அதிபர் திரு. இராசநாயகமும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார்.

தனித்திருந்த பெண்ணின் சங்கிலியை அறுத்தார்கள்!

சுழிபுரத்தில் காற்சட்டை வாலிபரின் கைவரிசை!!

[சுழிபுரம்]

சுழிபுரம் பத்திரகாளி கோவில் முகப்பிலுள்ள இல்லத்தில் நீண்டகாலமாக வாழ்ந்துவரும், திருமதி வ. சின்னத்தம்பி என்பவரின்கழுத்தில்இருந்த ஐயாயிரத்திஐநூறு ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அதிகாலை காற்சட்டை அணிந்த இரு வாலிபர்கள் அறுத்துச் சென்றுர்களாம். கணவர் எஸ். சின்னத்தம்பி கோவில் திருவிழாவிற்கு சென்றிருந்ததால் மனைவி தனிமையாகவே வீட்டில் இருந்தார். வெளிக்கொடியிலிருந்த சேலையை எடுத்துவந்து வாய், கண்களை ஒருவர் மூடிக்கொள்ள மற்றவர் கழுத்தை நெரித்துச் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓட்டம் எடுத்தாராம். உடனே அப்பெண் ''ஐயோ, ஐயோ'' என்று கதறியபோதிலும் கள்வரைபிடிக்க முடியவில்லையாம் கொள்ளையர்கள் இருவரும் ஓடிமறைந்துவிட்டனர்.

இக்கொள்ளை சம்பந்தமான ஒருபுகார் காங்கேசன்துறைப் பொலிசில் முறையிடப்பட்டுள்ளது. இக்கொள்ளை நடைபெற்றபோது வீட்டிலிருந்து இருநூறுயார் தூரத்திலுள்ள கோவிலில் பொப்பிசை நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது.

"எழுத்தாளன் வீட்டுக்கு வீடு இப்போது ஆட்சி புரிகிறான்'

'இதய சங்கமம்' வெளியீட்டு விழாவில் பேச்சு

(புங்குடுதீவு)

''எழுத்தாளன் இந்தக்காலத்தில் ஒவ்வொரு வீடுகளையும் ஆளுகின்றான். வீடுகளிலே நாளிதழ்களும், மாதஇதழ்களும், வானெலியும், தொலைக்காட்சியும் மக்களை நன்குகப் பாதிக்கின்றன. இதனால் எழுத்தாளனின் பொறுப்பும், பங்கும் அதிகமாகின்றது. எழுத்தாளன் ஒருவீட்டிற்கு தந்தையாக, தமையனுக நல்லாசிரியனுக, வழிகாட்டும் தலைவனுக, ஞானியாக விளங்கவேண்டிய கடமை மிக்கவனுக இருக்கின்றான்''

இவ்வாறு புங்குடுதீவுமகளன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் வெளியிடப்பட்ட 'இதய சங்கமம்' என்னும் மாதசஞ்சிகை வெளியீட்டு விழாவில் விமர்சன உரைநிகழ்த்திய புலவர் ஈழத்துச் சிவானந்தன் கூறினர்.

திரு, க. திருச்செல்வம் தலைமையில் நடந்த இவ்விழாவில் புலவர் சிவானந்தன் தொடர்ந்து கூறியதாவது: ''பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஒரு தொகுதிக்கு மட்டுமே பிரதிநிதியாவார்கள். ஒரு எழுத்தாளனே நாட்டிலுள்ள எல்லாத் தொகுதிகளின் பிரதிநிதியுமாவான். தன்னுடைய நாடு தவிர்ந்த பிறநாடுகளுக்கும் பிரதிநிதியாகும் பாக்கியம் எழுத்தாளனுக்கே உண்டு, என்று அமரர் ராஜாஜி கூறியதை எழுத்தாளர்கள் கருத்தில் இருத்தி எழுதவேண்டும். ஒரு தொகுதிப் பிரதிநிதியை விட ஒரு எழுத்தாளனின் நிதானமும், அவதானமும் செயல்பாடும் மிகமிகமுக்கியமானதென்பதை எழுத்தாளர் மறந்துவிடக்கூடாது.''

திரு. சு, வில்வரெத்தினம் பேசுகையில், 'இலங்கை தமிழ் தேசிய இனத்தில் யார் என்ன எழுதினாலும் தேசிய இனப் பிரச்னைகளை குறிப்பிடாமல் விடக்கூடாது. நமது வாசகர்கள் என்னவிலை கொடுத்தும் தென்னகத்து இதழ்களைவாங்குகிறார்கள். அந்தநிலை மாறவேண்டும். புதிதாக எழுதுகின்ற இளைஞர்கள் எழுதப் போகும் விடயங்களைப்பற்றி நன்குகச்சிந்தித்து எழுதவேண்டும்'' என்றார்.

இளைப்பாறிய அதிபர் தி. சதாசிவம் மங்களதீபம் ஏற்றிய இவ்விழாவில் திருவாளர்கள் கே. கனகசுந்தரம், சு. கருணாகரன், வ. பொன்னுத்துரை, சோ. சச்சிதானந்தன், வி. அன்ரனிமரியதாஸ் ஆகியோருட்பட பலரும் பேசினர். இதயசங்கமம் ஆசிரியர் சந்தியோ அமிர்தராஜா நன்றியுரை கூறினர். கலைநிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம் பெற்றன.

நன்றி நவிலல்

ஐயாத்துரை சிதம்பரம்

தோற்றம்: 01-07-1896
மறைவு: 30-06-1983

கல்வளை சண்டிலிப்பாயைச் சேர்ந்தவரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் ஐயாத்துரையின் மனைவியும் ''கல்வளைக்குமரன்'' ஐயாத்துரை குமாரசுவாமியின் தாயாரும், திருமதி பரமேஸ்வரி குமாரசுவாமியின் மாமியாரும், குமாரசுவாமி வினோதன், செல்வி உத்தமி குமாரசுவாமி, திருமதி ஜெயந்தி வினோதன் ஆகியோரின் பேத்தியுமாகிய ஐயாத்துரை கைம்பெண் சிதம்பரம் சென்ற ஆனி மாதம் 30-ம் நாள் சிவபதமெய்தினர். அன்னாரது ஈமக்கிரியைகள் 2-07-1983 சனிக்கிழமை காலை சண்டிலிப்பாய் சங்கம புலவு மயானத்தில் நடைபெற்றது. அத்தருணம் உடலாலும், உளத்தாலும் உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பேரன், பேத்திமார்

''உத்தமி இல்லம்'',
கல்வளை, சண்டிலிப்பாய். 8024

போலந்தில் கம்யூனிஸ்ட்டுகளின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி!

எதிர்வரும் வெள்ளி இராணுவச் சட்டம் நீக்கப்படுவது பெரும்பாலும் உறுதி!

வார்ஸோ, ஜூலை 18

போலந்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு மோசமாகப் பாதிப்படைந்துவருகின்றது. இங்கு இக் கட்சியிலிருந்தும் கடந்த மூன்முண்டுகளில் விலகியவர்களின் எண்ணிக்கை எட்டு லட்சம் என்று தெரிவிக்கப்பட்டது.

போலந்துநாட்டின் மொத்த சனத்தொகை மூன்றுகோடியே அறுபது லட்சமாகும். சொலிடாறிற்றி தொழிற்சங்கம் தடைசெய்யப்பட முன்னர் இங்கு கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு மிகவும் உச்சக் கட்டத்தில் இருந்துவந்தது. சுமார் ஒரு கோடி அங்கத்தவர்கள் இக் கட்சியில் அங்கத்துவம் வகித்தனர்.

இராணுவ ஆட்சி இங்கு கொண்டுவரப்பட்டதும் விலைவாசிகள் உயர்வடைந்ததையடுத்தும், இதனால் மக்களின் வாழ்க்கைத்தரம் குறைவடையத்தொடங்கியதையடுத்துமே கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கும் சரிவடையத்தொடங்கியது.

இது இவ்வாறிருக்க, எதிர்வரும் வெள்ளிக்கிழமை போலந்தின் தேசியதினத்தன்று கடந்த இரண்டு வருடங்களாக இருந்துவரும் இராணுவச்சட்டம் நீக்கப்படுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. ஆட்சியாளர்கள் இராணுவச் சட்டம் நீக்கப்பட்டதும் நாட்டில் ஏற்படக்கூடிய பதட்டநிலைகளைச் சமாளிக்கும்வகையில் சில புதிய சட்டங்களை விதிக்கவும் உள்ளனர்.

இச்சட்டங்களை விதிப்பது பற்றி எதிர்வரும் புதன், வியாழக்கிழமைகளில் போலந்து ஆட்சியாளர்கள் ஆலோசனைகளை நடத்துவர். இத்துடன் இராணுவச் சட்டம் நீக்கப்பட்டதும் சுமார் 450 அரசியல்வாதிகள் விடுதலைசெய்யப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

அமெரிக்க தனியார் கம்பனி விமானம் கடத்தப்பட்டது!

ஹவானா, ஜூலை 18

அமெரிக்காவின் 'டெல்ரா' என்ற தனியார் விமானக் கம்பனியொன்றின் விமானம் நேற்று நூறு பயணிகளுடன் கடத்தப்பட்டது.

இந்த விமானம் ராட்சத 'போயிங் 727' ரகத்தைச் சேர்ந்ததாகும். இவ் விமானத்தில் ஏழு விமானச் சிப்பந்திகளும் பணிபுரிந்துகொண்டிருந்தனர்.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்துக்கு போகப் பறந்துகொண்டிருந்த போதே இந்த விமானம் மூன்று கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டது.

திசைதிருப்பப்பட்ட இவ் விமானம் கியூபாவுக்குக் கொண்டுவரப்பட்டது. இங்கு ஹவானா விமானநிலையத்தில் இவ்விமானம் இறக்கப்பட்டது. அத்துடன் மூன்று கடத்தல்காரர்களும் கியூபா பாதுகாப்புப்படையினரிடம் சரணடைந்தனர்.

இவ் விமானம் கடத்தப்பட்டதன் நோக்கம், மற்றும் கடத்தல்காரர்கள் யார் என்பது போன்ற விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. விமானப் பயணிகளும், சிப்பந்திகளும் பிரச்னைகளெதுவுமின்றி விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறியப்படுகின்றது. (கி)

கடத்தல் முறியடிப்பு

(மன்னார்)

இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட 18 ஆயிரம் ரூபா பெறுமதியான 250 இந்திய சாரங்களை கார் ஒன்றில் கடத்திச் செல்ல எடுத்த முயற்சி பொலிசாரினால் முறியடிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை தலைமன்னரிலிருந்து மன்னார் நோக்கிச்சென்ற கார் ஒன்றை ஓலைத்தொடுவாய் பகுதியில் வைத்து மறித்த மன்னார் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுணேந்திரன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் அதனுள் சோதனையிட்ட போதே கடத்தல் பொருட்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து காரசாரதியும் அதில் இருந்த தெஹிவளையைச்சேர்ந்த இரு சந்தேகநபர்களும் தலைமன்னார் சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். தலைமன்னார் சுங்க அதிகாரிகளான திரு. யாக்கோப், பரஞ்சோதி ஆகியோர் தெஹிவளையைச் சேர்ந்த இரு சந்தேகநபர்களுக்கும் தலா 2 ஆயிரம் ரூபாவும், காரச்சாரதிக்கு 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்து கடத்தல் பொருட்களை பறிமுதல் செய்தனர். (கி)

மத்திய கிழக்குப் பிரச்னைகளுக்கு சர்வதேச மாநாடே தீர்வு!

மாஸ்கோ, ஜூலை, 18

"மேற்குலக வல்லரசுகளின் அதிகாரக் கொள்கைப் போக்கும் வன்முறைக் கொள்கையும் நாடுகளுக்கிடையே பகைமையைத் தூண்டிவிடும் போக்கும் செல்வாக்கு மண்டலங்களை உருவாக்கும் போக்கும்தான் சர்வதேச நிலைமையை உக்கிரப்படுத்தி வருகின்றன" என்று அண்மையில் இங்கு கூடிய வார்ஸோ நாடுகளின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இக்கருத்திற்கு உதாரணம் கூறுவதாயின் மத்திய கிழக்கு நிலைமையைக் கூறலாம் என்று மத்திய கிழக்கு விவகாரங்களில் நிபுணரான எட்வர்ட் ரியாப்ட்சேள் கூறினர்.

பலஸ்தீன மக்களுக்குச் சொந்த நாட்டை உருவாக்கி அவர்களது தேசிய அபிலாஷைகளை நிறைவேற்றிவைப்பதுமட்டுமே மத்திய கிழக்கின் நெருக்கடி நிலைமைக்கு முடிவுகட்டும் என்பது மாஸ்கோவின் வாதம். அண்மைக்கால நிகழ்வுகள் இதுவே சரியான நிலையென்பதை ஊர்ஜிதப்படுத்தியுள்ளன.

அமெரிக்காவின் மத்திய கிழக்குச் சார்பான கொள்கையோ நிலைமையை மேலும் சீர்குலைப்பதாக உள்ளது. இக் கொள்கையின் விளைவாக இன்று லெபனானிய பிரச்னை தோன்றியுள்ளதுடன் 40 லட்சம் பலஸ்தீனியர்களது தலைவிதியும் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. மத்திய கிழக்கின் பிரச்னையின் முடிச்சு மேலும் இறுகியுள்ளதென்றும் இந்த விமர்சகர் குறிப்பிடுகிறார்.

அமெரிக்கா மத்திய கிழக்கில் மேற்கொள்ள விழையும் சமாதான முயற்சிகள் யாவும் அதன் அரசியல் லாபங்களைத் தேடும் நோக்கமுடியவை என்பதை மத்திய கிழக்கிலுள்ள அரசியல் வட்டாரங்கள் நன்குணர்ந்துவிட்டன. மத்திய கிழக்குப் பிரச்னைகளைத் தீர்க்க ஒரு விசேஷ சர்வதேச மகாநாடு கூட்டப்படவேண்டுமென்பதை மத்திய கிழக்கின் மக்கள் மென்மேலும் உணர்ந்து வருகிறார்கள்.

இத்தகைய மகாநாட்டின் மூலமே மத்திய கிழக்கில் மெய்யான சமாதானத்தை அடைய முடியுமென்பதை அண்மையில் ஜோர்தானின் முடிக்குரிய இளவரசர் ஹசன் தெரிவித்துள்ளார் என்றும் இந்த விமர்சகர் முடிவில் சுட்டிக்காட்டுகிறார். (கி)

புதிய அதிபர்

(துணுக்காய்)

யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரியின் புதிய அதிபராக திரு. க. செல்லத்துரை பதவி ஏற்றுள்ளார். இவர் கடந்த 15 வருடங்களாக கூட்டுறவுத் துறையில் கடமைபுரிந்து வருகிறார்.

யாழ். கூட்டுறவு கல்லூரி அதிபராகக் கடமை புரிந்த திரு. சி. சிவசப்பிரமணியம் அவர்கள் இவ்வாண்டு தை மாதம் தொடக்கம் கூட்டுறவு பிராந்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றதையடுத்து இப்பதவி நிரப்பப்படாமல் இருந்தது. திரு. செல்லத்துரை கல்லூரியின் பொறுப்பதிகாரியாக பதவி ஏற்றுள்ளார்; (கி)

சீனாவில் வெள்ளப்பெருக்கு 100 பேர் பலி

பீக்கிங் ஜூலை. 18

சீனாவில் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற வெள்ளப்பெருக்கினால் 100 பேர் பலியாகியுள்ளனர்.

சீனாவின் மிகப்பெரிய நதியான "யங்கிஸ்" நதி பெருக்கெடுத்ததினால் 20,000 ஏக்கர் நிலம் பாழடைந்துள்ளதாகவும், 3லட்சம் பேர் வீடுகளை இழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்நதிப்பெருக்கெடுப்பு பெரும்பாதிப்பினைச் சீனாவுக்கு ஏற்படுத்தியிருந்தது. (சூ)

எண்ணெய் உற்பத்தி, விலை தற்போதைய நிலையில் வைத்திருக்க 'ஒபெக்' முடிவு?

லண்டன், ஜூலை 18

எண்ணெய் உற்பத்தி விலை ஆகியனவற்றை தற்போதைய நிலையிலேயே இந்த ஆண்டில் வைத்திருக்க 'ஒபெக்' அமைப்பு தீர்மானித்துள்ளதாக அறியப்படுகின்றது.

கடந்த மார்ச் மாதம் 'ஒபெக்' ஸ்தாபன எண்ணெய் அமைச்சர்களின் மாநாடு லண்டனில் நடைபெற்றது. அம்மகாநாட்டில் எண்ணெய் விலையை 'ஒபெக்' ஸ்தாபனம் குறைத்ததுடன் எண்ணெய் உற்பத்தியிலும் மாற்றத்தை அறிவித்தது.

இந்த ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் இந்தோனேஷியாவின் எண்ணெய் அமைச்சர் டாக்டர் சுப்ரடோ மேற்குறிப்பிட்ட முடிவுகளை ஆட்சேபித்திருந்தார்.

இன்று ஹெல்சிங்கியில் 'ஒபெக்' நாடுகளின் அமைச்சர்கள் கூடவுள்ளனர். அவர்கள் இந்த ஆண்டில் தற்போதைய நிலையிலேயே எண்ணெய் உற்பத்தி, விலை ஆகியவற்றை வைத்திருப்பது குறித்து உறுதியான முடிவுகள் எடுப்பர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (கி)

புங்குடுதீவில் பாரிய சிரமதானப் பணி

[புங்குடுதீவு]

புங்குடுதீவின் வடகரையால் கடலுக்குள் வீணேவழியும் மழைநீரைத்தேக்கவும், பாணுவிடைச்சிவன் தேவஸ்தானத்திற்குப்பாதை வசதியளிக்கவுமெனப் புங்குடுதீவு இளைத்தமிழர் மன்றத்தினர் 12 அடி அகலத்தில் ஒன்றேகால் மைல் தூரத்திற்குச் சிரமதானம் மூலம் அமைத்துவரும் புங்குடுதீவு வடகரை அணைப்பாதை தற்போது 2000 அடிகளைக் கடந்தவிட்ட நிலையில் தொடர்ந்தும் சிரமதானவேலைகள் நடைபெற்றுவருகிறது.

சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரனின் மேற்பார்வையில் நடைபெற்றுவரும் இப்பாரிய சிரமதானப்பணிக்கு திரு. எச். ஈ. எஸ். உதயகுமார் பொறுப்பாளராகக் கடமையாற்றுகின்றார்,

மிகக்குறுகிய காலத்தில் 2000 அடிகளைக் கடந்து விட்ட இப்பணி பலரின் பாராட்டுதல்களுக்குள்ளாகியுள்ளது. இத்துரித முன்னேற்றத்தினால் கவரப்பட்ட பொதுமக்கள் பலர் இச்சிரமதானப்பணியில் கூடுதலாகப் பங்கேற்று வருகின்றனர். திரு. எஸ். செல்வராசா தண்ணீர் வழங்கி வருகிறார். புங்குடுதீவு பிரதான வீதியால் பயணம் செய்யும் பிரயாணிகளும் இச்சிரமதானப்பணிக்குப் பொருளுதவி புரிந்து வருகின்றனர் இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான வேலை இதுவரை செய்யப்பட்டுள்ளதாக மதிப்பிடப்படுகிறது. (அ)

பல்கேரிய மொழியிலும் பாரதி படைப்புகள்!

மாஸ்கோ, ஜூலை, 18

பல்கேரியாவிலேயே முதன் முறையாக "ரோதினு ரெச்" என்ற சஞ்சிகையும், "பல்ஸ்" என்ற இலக்கிய சஞ்சிகையும் பாரதியாரின் கவிதைகள் சில வற்றைத் தேர்ந்தெடுத்துப் பிரசுரித்திருக்கின்றன. "விநாயகர் நான்மணி மாலை", "உயிர் பெற்ற தமிழர்" என்ற பாடல்களின் சில பகுதிகளை அவை மொழிபெயர்த்துப் பிரசுரித்திருக்கின்றன.

சோவியத் இந்திய மொழி அறிஞர்களுக்கும், பல்கேரியப் புலவர்களுக்கு மிடையே யான ஒத்துழைப்பினுல் இது சாத்தியமாயிற்று. இந்தப் பாடல்களைப் பல்கேரியக் கவிஞர் கிராசிமிர் மாஷெவ் மொழிபெயர்த்தார்.

பாரதியாரின் வாழ்க்கையையும் கவிதையையும் பற்றி "ரோதினு ரெச்" சஞ்சிகையில் மாஷெவ் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். புரட்சி மனப்பான்மைகொண்ட ரஷ்ய மக்களின் வெகுஜன இயக்கத்தின் செல்வாக்கித்கு பாரதி பெரிதும் உள்ளானதாக அவர் கூறுகிறார்.

"1905 மற்றும்1917ம்ஆண்டு ரஷ்யாவின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளை மற்றவிதமான அக்கிரமம் அல்லது ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களுடன் பாரதி ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

"இந்திய இலக்கியத்தில் சுப்பிரமணிய பாரதி ஓர் அலாதியான இடம்வகிக்கிறார். அவர் மக்களின் மாபெரும் கவிஞர்" என்று மாஷேவ், "பல்ஸ்" சஞ்சிகையில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பல்கேரிய சஞ்சிகைகளில் பாரதியார் கவிதைகளுடன், சோவியத் கலைஞர் மிசாயில் ஃபிதோரோவ் திட்டிய பாரதியாரின் படமும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மத்திய அமெரிக்க நாடுகளுக்கான இராணுவ உதவி அதிகரிப்பு

வாஷிங்டன். ஜூலை. 18

மத்திய அமெரிக்க நாடுகளுக்கான இராணுவஉதவியை ஜனாதிபதி ரீகன் நிர்வாகம் 40சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இத்தகவலை நியூயோர்க் டைம்ஸ் என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இக்கொள்கைக்கு இணங்க அடுத்த ஆண்டு தொடக்கம் கொஸ்ரரிக்காவுக்கான ஆயுத விநியோகம் இருமடங்காகவும் கௌத்தமாலாவுக்கு 80சதவீத அதிகரிப்பும் கொண்டுரஸ், எல்சல்வடோர் ஆகிய நாடுகளுக்கு 30சதவீத அதிகரிப்பான ஆயுதங்களையும்வழங்க அமெரிக்கா முன்வந்திருப்பதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (சூ)

மணிவாக்கு

வேற்றுமொழிகளில் உள்ள சொற்கள் தமிழில் நன்முகப் பிரயோகித்துப்பழக்கப்பட்டால், அவற்றிற்க்கு தூயதமிழ் தேடும் தூரபயணத்தைக் கைவிடுங்கள். அச்சொல்களையே தமிழ் அகராதியில் சேர்த்துக்கொள்ளுங்கள்.

—சுவாமி விபுலாநந்தர்.

நமது நோக்கு

உள்நாட்டு விவகாரம்; தாய்நாட்டுக்கு உரித்துண்டு

'இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்' என்று இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு ராஜீவ் காந்தி சென்னையில் தெரிவித்திருக்கிறார்.

''இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளுக்கு இலங்கை ஜனதிபதி ஜயவர்த்தனா சுமுகமான முடிவுகாண வேண்டும். வன்முறைகள் பயங்கரவாதம் ஆகிய வற்றை ஒடுக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதனால் அப்பாவித் தமிழ் பேசும் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இலங்கை அரசாங்கம் வன்செயல்களை ஒடுக்க எடுக்கும் நடவடிக்கைகள் என்றபெயரால் தமிழ் மக்கள் பாதிப்படைவதைத் தடுக்க வேண்டும்'' என்று சென்னையில் பேசியிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள். இதனை வெளிநாட்டுத் தலையீடு என்று கொள்ளலாகாது. சேய் நாட்டின் சேமத்தில் அவர்களுக்கும் உரித்துண்டு.

இதற்கு முன் சென்னையில் நடைபெற்ற மாபெரும் அனுதாபக்கூட்டமொன்றில் பேசிய தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை கண்ணீர் வடிக்க வைத்ததோடு தாமும் மேடையில் அழுதுவிட்டார்.

இன்றைய இலங்கைத் தமிழர் நேற்றைய இந்தியர்களே! தனியரசுபெற்ற இத் துரதிர்ஷ்டவசமான இப் பிரிவினர் இந் நாட்டின் ஒரு சிறுபான்மைச் சமூகமென்று இலங்கை அரசு கருதுகிறது.

அது சுதந்திரத்துக்குப் பின் வளர்ந்துவந்த அரசியல் மோசடி.

தமிழ் மக்கள், சிங்கள மக்களுடன் சரிநிகர் சமானமாக இந் நாட்டில் சுதந்திர புருஷர்களாக செங்கோலோச்சிவந்த ஒரு கல்வி, பண்பாடு, கலாசாரத்தால் உயர்ந்த இனம்.

பிரிட்டிஷ் ஆட்சியில் இலங்கைத் தமிழர்கள் தமிழகத்துடன் கொண்டிருந்த தொடர்பு இன்றைய நிலையிலும் பார்க்க அன்னியோன்யமானது.

சுதந்திர இலங்கை தனது மாபெரும் அண்டைநாடாகிய உபகண்டத்தை சந்தேகக்கண்ணுடன் நோக்குவதற்கு காரணமாயிருந்தது ஆதாரமற்ற அச்சம்.

இந்த அச்சம் பண்டைய சரித்திரத்தின் விட்டகுறை தொட்டகுறையாகவிருக்கலாம்.

காந்தியின் சுதந்திர இந்தியா வேறெந்த நாட்டைத்தாக்கி தனதாக்கவோ அல்லது தன்னைத் தாக்க வரும் எந்த நாட்டையும் தப்பிஓடவிடவோ சித்தமில்லாமலிருக்குங் கொள்கையில் என்றும் விலகியதுடையாது.

பரந்த அரசியல் ஞானம் படைத்த டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அடிக்கடி பாராளுமன்றத்தில் நினைவூட்டிய குறள்போன்ற வசனம் எவரும் மறப்பதற்கில்லை. ''ஒரு மொழி, இரு நாடுகள்; இரு மொழிகள் ஒரு நாடு''.

இவருடைய தீர்க்கதரிசனம் இன்னும் பொய்க்கவில்லை; ஒரு மொழி ஏற்படுத்தி வந்த விளைவுகளை இன்று இருநாட்டுக் கொள்கை உண்டு பண்ணியிருக்கின்ற அழிவு நிலை எனக்கொள்க.

கலாநிதி கொல்வினின் அரசியல் ஞானம் எவ்வாறென்பதை இன்றே கணித்துவிட முக்கிய திருப்பங்கள் உதவுகின்றன.

பண்டாரநாயக்காசெல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்படுத்திய கண்டியாத்திரைத் தலைவரும், அதனைத்தடுக்க முன்வந்த கம்பகா எம். பி. திரு. பண்டாரநாயக்காவும் இன்று ஒன்று சேர்ந்துவிட்டனர். அதே சமயம் ''சிங்களம் மட்டும்'' என்ற சட்டத்தைத் துரிதப்படுத்திய கம்பகா எம். பி. இன்று தமிழுக்கு உத்தியோக மொழி அந்தஸ்து வழங்க வேண்டுமென்று நிற்கின்றார்.

எனவே, இன்றைய கால கட்டத்தில் அகில உலகும் அறியும் வண்ணம் இலங்கைத் தமிழர் பிரச்னை ஒரு சிறு பான்மையினர் பிரச்னையல்லவென்பது தெளிவு பெற்றிருக்கிறது.

இம்முழுப் பூசினிக்காயை சில கொழும்புத் தினசரிகள் தங்கள் சோற்றிற்குள் மறைக்க முயல்வது வெறும் மூடத்தனம்.

இலங்கைத் தமிழர் பிரச்னை எடுத்த பல வடிவங்களில் ஒன்று இளைஞர் துப்பாக்கிப் பிரயோகம். இதனை முறியடிக்க முயன்றது அரச பயங்கரவாதம். இளைஞர் 'பயங்கரவாதம்' பற்றிய பிரசாரம் பெருக்கெடுத்த போதும் அதனைத் தடுத்து நிறுத்த முடியாத நிலையில், தமிழ் மக்களை — குறிப்பாக யாழ்ப்பாண மக்களைக் கண்டிப்பதே அரசின் கொள்கையாகிவிட்டது. இத்தவறு அரசுக்குப் புலப்படாததன் காரணமென்ன?

பொருளாதார முற்றுகை ஆரம்பக் கட்டத்தில் இருந்த போதும், இராணுவத்தினால் இப்பகுதி அப்பாவி மக்கள் தினந்தோறும் பஞ்சுபடாப் பாடுபடுகிறார்கள்; இருந்தும் இது உள்நாட்டுப் பிரச்னையே!

ஜனதிபதி ஜெயவர்த்தனா பல வித கருத்துக்களைக் காலத்திற்குக் காலம் வெளியிட்டபோதும், ராணுவ ஆட்சியில் இறங்க நேரிட்டால் யாழ்ப்பாணம் இலங்கைப் படத்திலிருந்து அழித்துவிடப்படுமென்று யாரும் நம்புவாரா? அக்கட்டத்தில் தாய் சேயைக் கைவிடுமா? சந்தேகம்!

மட்டுநகர் தந்த மயில்வாகனனர் இன்று சுவாமி விபுலாநந்தர் நினைவுதினம்

[மட்டுநகர் தந்தமயில் வாகனன் என்ற சுவாமி விபுலானந்தரைப் பற்றி அமரர் ஹன்டி பேரின்ப நாயகம் ஆங்கிலத்தில் எழுதியதன் தமிழாக்கம்.]

இலங்கைக்குப் பூரண சுதந்திரம் வேண்டுமென்று தீவிரமாக உழைத்துவந்த யாழ்ப்பாண வாலிப மகாநாட்டுக்குத் தலைமை தாங்கியவர் ராமகிருஷ்ணமிஷன் துறவியாகிய சுவாமி விபுலானந்தர் என்பதை இன்று பலர் அறியார்.

1927ல் மகாத்மாகாந்தி யாழ்ப்பாணம் வந்தபோது சுவாமியின் தலைமையில் யாழ்ப்பாண வாலிபமகாநாடு காந்தியை வரவேற்று ஆங்கிலத்தில் (மொழிபெயர்ப்பின்றி) பேசவைத்த சம்பவம் தனித்துவமானது.

அக்காலத்தில் பாரதி ஒரு பெரும் புலவன் என்றே அவரது பாடல்களைப் பாடுவது பொருத்தமென்றே தமிழ் அறிஞர்கள், பண்டிதர்கள் கொள்ளவில்லை.

இதனையெல்லாம் மாற்றி, பாரதியாரின் பெரும்புலமையை இங்கு மட்டுமன்றி இந்தியாவிலேயே விளக்கியவர் சுவாமி விபுலானந்தர்.

தமிழ் மறுமலர்ச்சிக்குச் சுவாமிஜி செய்த இமயம் போன்ற பணிபற்றி இங்கு சுருக்கமாகக்கூறிவிடமுடியாது. நல்லூநகர் ஆறுமுக நாவலர் மீது சுவாமிகள் கொண்டிருந்த பற்று அளவிடமுடியாது.

ஆங்கில இலக்கியத்தின் இலங்கு நூல்கள்பற்றித் தமிழ் மக்கள் அறிந்திருக்கவேண்டுமென்ற அவா சுவாமிகளைப் பீடித்திருந்தது. ஷேக்ஸ்பியரின் பல நாடகங்களின் சிறந்த பகுதிகளைத்தமிழில் எழுதி மதங்கசூழாமணி என்றபெயரில் வெளியிட்டார். தமிழ் மட்டும் தெரிந்தவர்கள் உலக மகாகவியின் பெரும்புலமையைப் புரிந்துகொள்ள இந்நூல் உதவும்.

கீட்ஸ் (Keats) என்ற ஆங்கில கவிமேதையின் நூற்றாண்டு விழாக்கொண்டாடப்பட்டபோது அவருடைய சிறந்த பாக்களைத் தமிழில் ஆக்கி லண்டன் நூற்றாண்டு விழாச் சபைக்கு அனுப்பிவைத்தார்.

இமயமலையில் 'பிரபுத்த பாரத்' என்ற சுவாமிவிவேகானந்தர் தொடக்கிவைத்த புகழ் பெற்ற சஞ்சிகைக்குச் சுவாமிகள் ஆசிரியராயிருந்தபோது தமிழ் இலக்கிய உலகில் சுடர் விட்டுக்கொண்டிருந்த பண்டிதமணி கதிரேசன்செட்டியாரின் சஷ்டியப்த பூர்த்தி விழாவுக்கு இமயத்திலிருந்து அவர் அனுப்பிவைத்தபரிசு 'சோசர் (Chaucer) தொடக்கம் அன்றுவரை ஆங்கில இலக்கிய வரலாற்றின் சுருக்கம்' என்ற நூல்.

ஆங்கிலத்தில்நான் இவற்றை நேரில் ரசித்தபோதிலும் சுவாமிகளின் மொழிபெயர்ப்பு அதிக இன்பத்தை அளித்தது.

சுவாமிகள் ஒரு B. Sc. பட்டதாரி. சம்பத்திரிசியார் கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர், மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் — இவ்விதபன்முகப்பட்ட திறமையால் தமிழிலே விஞ்ஞான அகராதி தயாரிக்க முடியுமென்ற துணிவை மற்றவர்களுக்கு ஏற்படுத்தி, ஊக்கமளித்து அத்துறையிலும் பெருவெற்றி கண்டவர்.

இம்மாபெரும் பணி இன்றுமுன்னேறுத நிலையிலிருப்பது வேதனைக்குரியது.

அன்னாரின் யாழ் நூல் ஆராய்ச்சியில் உலகம் அவரை அறிந்தது. ஆனால், அவர் ஒரு தெய்வீக புருஷர், இலக்கிய மேதை, தத்துவ ஞானி என்பதுடன், விவாதங்களில் தலையிட்டு மாற்றுனைத் தோற்கடிக்கும் நகைச்சுவை மன்னன் என்பதையும் அறிக

"மாணவர்களை நல்லவர்களாக்கும் பொறுப்பு பொதுமன்றங்களுக்கும் உண்டு"

பரிசளிப்பு விழாவில் விக்ரோறியா அதிபர்

(சுழிபுரம்)

''கல்வியைக் கற்பதற்குப் பாடசாலைகள் செயல்படுவது போல், ஒழுக்கத்தை மேன்மையுறச்செய்யும் பணிகளில் சனசமூக நிலையங்கள் செயல்படவேண்டும். உலக உள்ளூர் விவகாரங்களை எல்லாம் மக்கள் அறியக்கூடியவாய்ப்பை நாம் எந்தெந்தவழிகளில் பெற்றுக் கொள்ளலாமோ அந்த வழிகளையும் பயன்படுத்தத் தவறக்கூடாது. மாணவர்கள் பாடசாலையில் கழிக்கும் நேரத்திலும் பார்க்க அதிக நேரத்தை வெளியில்தான் செலவு செய்கிறார்கள். ஆதலால் மாணவர்களை நல்லவர்களாக விளங்கச் செய்யும் பொறுப்பு பொது இயக்கங்களிடமும், சமூகப் பணியாளர்களிடமும் உண்டு என்பதை நாம் மறக்கக் கூடாது''

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. க. அருணாசலம் சுழிபுரம் கல்வேம்படி கலைவாணி சனசமூக நிலைய முதலாவது ஆண்டுப் பரிசளிப்பு விழாவில் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். நூல் நிலையத்திற்கு அருகாமையாகவுள்ள திறந்தவெளியில் நிலையத் தலைவர் என். எஸ். சிவலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது. பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் திரு. கா. சந்திரராசா கலந்துகொண்டார்.

திரு. கா. சந்திரராசா பேசுகையில், ''கல்லூரிவேம்பு பகுதி இச்சனசமூகப் பணியால் பல எழுச்சிகளை காண்பதை இன்றைய விழா எடுத்துக்காட்டுகின்றது. மக்கள் தேவைகள் நிறைவுசெய்யும் பணியில் நிலையம் தொடர்ந்து செயல்பட வேண்டும். இதற்கான எல்லா உதவிகளையும் நாம்செய்ய என்றும்காத்திருக்கின்றோம். வாசிகசாலைகள் அறிவைவளர்க்கும் சிறந்த பணிகளைச்செய்து வருவதைபோல், உடல், ஆத்மீகம் போன்ற காரியங்கள் பணியாற்ற இந்நிலையம் முன்வரவேண்டும்'' என்றார்.

ஆசிரியர் திரு. ந. சிவசண்முகமூர்த்தி பேசுகையில், 'எமது பகுதியில் மறைந்திருக்கும் கலைஞர்கள், திறமைமிக்கோர் யாவரையும் வெளியே உள்ளவர்கள் தெரியச்செய்வது எமது முதற் பணியாகவிளங்கவேண்டும் கலை கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு எங்கள் திறமையை மிளிரச்செய்யவேண்டும்'' என்றார்.

சுழிபுரம் மேற்கு கிராமோதய சபைத் தலைவர் ஆசிரியர் திரு. மு. தம்பியையா பேசுகையில், 'இளம்பிள்ளைகளுக்கு நீதிவாக்கியங்கள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம் ஆகியவற்றை போதிக்க சனசமூக நிலையம் முன்வரவேண்டும். நல்ல பணிகளைச்செய்துஉண்மை-நேர்மையாக வாழ நாம் இளையோருக்கு வழிகாட்டியாக அமையவேண்டும்.

சட்டத்தரணி பொன். சிவபாலன் பேசுகையில் விழாக்கள் யாவும் நல்ல பயனைத்தரவேண்டும். ஒழுக்கம் மிக்க சமுதாயம் உருவாக்க நாம் எமது பங்கைச் செலுத்தவேண்டும் என்றார்.

திருவாளர்கள்: மு. குணசிங்கம், கா. அரிச்சந்திரா, இ. முருகேசு, க. சிவராசா, கு.

(8-ம் பக்கம் பார்க்க)

எம். எல். வி. க்கு தேவையில்லாத வேலை!

மக்கள் கருத்து

நிலைமை தெரியாமல் பேசிவிட்டு சிலர் நாக்கைக் கடித்துக் கொள்வது வழக்கமான ஒன்றுதான்.

பிரபல தென்னிந்தியப் பாடகர் திரு. டி. எம். சௌந்தரராஜன் தனது வாயாலேயே தமது திரைப்படச் சந்தர்ப்பத்தைப் பாழாக்கியவர்.

பிரபல தென்னிந்திய நடிகர் திரு. ஜெமினி கணேசனின் கதையும் இதுதான்.

''காரணம் கேட்டு வாடி'' என்ற பாட்டில் செல்லாமணைக் குத்தூது சென்றுவா என்றேனே? செய்யாத காரியம் செய்ய முன்வந்தேனே?' என்ற அடிகள் உண்டு. இதனை இங்கு வந்துள்ள எம். எல். வசந்தகுமாரி அற்புதமாகப் பாடுவார். அவரது இசையைப் பல்லாயிரக்கணக்கான தமிழ் ரசிகர்கள் ரசிப்பதுண்டு.

இப்படிப்பட்ட இசைக் கலைஞர் வீணை ஒரு பிரச்னையில் தலையிட்டு தான் பெரிய அரசியல் தீர்க்கதரிசி என்று எண்ணிக் கருத்துச் சொல்லித் தமது அருமையான பெயரை வீணைக் கெடுத்துக் கொண்டுவிட்டார்.

எத்தனையோ பாரத அரசியல் தலைவர்கள்கூட இங்கு வந்து மாட்டிக்கொள்ளாமல் கௌரவமாகத் திரும்பிப்போய் விடுகின்றார்கள். பாவம்! எம். எல். வசந்தகுமாரி வீணை பழியைத்தான் சுமந்து கொண்டு செல்கின்றார்.

கலைஞர்கள் தூதுவர்களாக வரட்டும். நல்லிசையைப் பரப்பட்டும். ஆனால் நிலைமையைச் சரியாகத், தெளிவாகத் தெரிந்துகொள்ளாமல் எரிகின்ற நெருப்பில் தமது கைவிரலையும் வைத்துவிட்டு வந்த வேலையை மறந்து சம்பந்தா சம்பந்தமில்லாத வேலையைச் செய்ய முற்படுவது வீணை வெறுப்பையே சம்பாதிக்க வழிகோலிவிடுவதாக இருக்கும்.

க. கணேசலிங்கம்,
யாழ்ப்பாணம்.

ஒரு நீச்சல் வீரனின் பரிதாப முடிவு

(நயினாதீவு)

அனலைதீவிலிருந்து நயினாதீவுக்கு நீந்திச்சென்றுவர முயன்ற இளைஞரொருவர் நீரில் மூழ்கி மரணமானார்!

நயினாதீவைச் சேர்ந்த இருபத்தியொரு வயதான ஐயம்பிள்ளை செல்வராசா என்பவரே இந்த இளைஞராவார். இவர் கடந்த மாதம் 21ந் திகதி இரவு ஏழுமணியளவிலேயே அனலை தீவிலிருந்து தமது நீச்சலைத் தொடங்கினார்.

இவருடன் கணபதி சிவா என்ற வேறொரு இளைஞரும் இந்த நீச்சல் முயற்சியில் இறங்கியிருந்தார். ஆனால் அவரால் தொடர்ந்து நீந்தமுடியாமல் போகவே இடைநடுவில் தமது முயற்சியைக் கைவிட்டு அனலை தீவுக் கரையை அவர் மீண்டும் அடைந்தார்.

மறுநாள் ஐயம்பிள்ளைசெல்வராசா அவரதுஇலக்கான நயினாதீவு கரையை அடையாததையடுத்து அவரைத்தேடி அவர் நீந்திய பகுதிகளில் தீவிர தேடுதல் நடத்தப்பட்டது இதனையடுத்து ஊர்காவற்றுறை கடற்கோட்டைக்கருகே அவரது சடலம் இரு தினங்களின் பின்னர் காணப்பட்டது.

அனலைதீவு மரணவிசாரணை அதிகாரி திரு. என். சிவனடியான் மரணவிசாரணைகளை மேற்கொண்டார். விசாரணை முடிவில் நீரில் மூழ்கி மூச்சுத்திணறியதால் ஏற்பட்ட மரணமென தீர்ப்பளிக்கப்பட்டது

(கி

கூட்டணி எம். பி.க்கள் எவருமே ராஜினாமாச் செய்யமாட்டார்?

(ஈ. கே. ஆர்.)

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்கள் எவருமே ராஜினாமாச் செய்யமாட்டார்கள்! மன்னாரில் இம்மாதம் 23ம், 24ம் திகதிகளில் நடக்கவுள்ள மாநில மகாநாட்டில் இந்த முடிவு பகிரங்க அறிவிக்கப்படுமென்று நம்பகமாகத் தெரிய வந்துள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்கள் ஜூலை 21ம் திகதியுடன் தமது பதவியை ராஜினாமாச் செயவார்கள் என்று பாராளுமன்றத்தின், ஆயுட்காலம் நீடிக்கப்பட்டபோது அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆறாண்டு காலத்துக்குத்தான் மக்கள் தமக்கு ஆணை வழங்கியிருந்தார்கள் என்றும், ஜூலை 21ம் திகதியுடன் அந்த ஆறாண்டுகாலம் முடிவடைவதால், ராஜினாமாச் செய்து மீண்டும் தேர்தலுக்கு நின்று மக்கள் ஆணையைப் பெற்று பாராளுமன்றம் செல்வதென்று கூட்டணி எம். பிக்கள் முடிவு செய்திருந்தனர். முன்னதாக ராஜினாமாக் கடிதங்களும் செயலாளர்நாயகத்திடம் இதற்காகக் கொடுத்து வைத்திருப்பதாகவும் அப்போது செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆயினும் இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில், ராஜினாமாச் செய்யக்கூடாது என்றும், அதற்கேற்ற ஒரு சூழ்நிலை வரும்போது ராஜினாமாச் செய்து தேர்தலுக்கு நிற்கலாமென்றும் பிரேரணை மாநில மகாநாட்டுக்குக் கொண்டுவரப்படவிருக்கிறது.

மன்னார் மாநில மகாநாட்டில் சமர்ப்பிப்பதென 'பிரேரணைகளை ஒவ்வொரு தொகுதி மூலக் கிளைகளும் கொண்டு செல்லவுள்ளன. இந்தப் பிரேரணைகள் தொகுதிமூலக் கிளைகளில் விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டே அங்கு கொண்டு செல்லப்படுகின்றன.

கூட்டணி எம்.பி.க்களின் ஒவ்வொரு தொகுதிகளும், தேர்தலுக்குச் சாதகமான ஒரு காலம் வரும்வரை ராஜினாமாச் செய்யக்கூடாது என்ற பிரேரணையை ஏற்று, அதனையே மகாநாட்டில் சமர்ப்பிப்பதென்று முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் தாம் காங்கேசன்துறைத் தொகுதி எம். பிப் பதவியை ராஜினாமாச் செய்து கொள்வதாகவும் மற்றையோர் ராஜினாமாச் செய்வதில்லையென்ற கருத்தை தலைமைப்பீடம் ஆராய்ந்ததாகவும், பின்னர் அந்த எண்ணம் கைவிடப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தமது எம். பி.ப் பதவியிலிருந்து விலகிக் கொள்ளப் போவதாக செய்திகள் அடிபட்ட போதிலும் அவர் ராஜினாமாச் செய்யமாட்டார் என்பது இப்போது உறுதியாகிவிட்டது! ஜூலை 21-ம் திகதிக்குப் பின்னர் அவர் பாராளுமன்றம் செல்லப் போவதில்லை என்றே அறிவிக்கவுள்ளார்.

தொடர்ந்து மூன்று மாத காலத்துக்கு பாராளுமன்றம் செல்லாது விட்டால் எம். பிப் பதவி பறிபோகும். அப்படிச் செய்யப்போவதாகவே 'நவம்' கூறவுள்ளதாகவும் தெரிகிறது.

அரசியல் சூழ்நிலையில் தொடர்ந்து பாராளுமன்றம் செல்லாது பகிஷ்கரிப்பதைக் கைவிடுமாறும், மூன்றாவது மாதத்தின் கடைசி நாளில் பாராளுமன்றம் சென்று தொடர்ந்து எம். பி யாக இருக்க வேண்டுமெனவும் சாவகச்சேரி மக்கள் வற்புறுத்தும் பட்சத்தில் சாவகச்சேரி எம். பி. 'நவம்' தனது முடிவை மறுபரிசீலனை செய்யலாமென்று கூட்டணி வட்டாரங்களில் இப்போது பேசப்படுகிறது.

எந்தக்கட்டத்திலும் தமிழீழக் கோரிக்கையைத் தமிழர் விடுதலைக்கூட்டணி கைவிடக்கூடாது என்ற பிரேரணையொன்றும் மாநில மகாநாட்டுக்கு வருகிறது.

வண். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில்

பழைய ஆசிரியர்களைக் கௌரவித்த நன்றி விழா!

ஆசிரியர்களை மதிக்கும் பண்பு இப்போது குறைந்து வருகின்றது! அதுமட்டுமல்ல, சமுதாயத்தில் நடந்து கொண்டிருக்கும் எல்லாத் தவறுகளுக்கும் ஆசிரியனையே குறை சொல்லும் வழக்கமும் இப்போது அதிகரித்து வருகிறது. ஆசிரியன் ஒருவனைத்தான் எவரும் இலகுவில் திட்டலாம். அவன் கொஞ்சமாவது படித்திருப்பான் எனவே எதிர்த்தாக்குதலுக்கு அவன் தயாரில்லை. அதுமட்டுமல்ல ஆசிரியன் இப்படிச் செய்துவிட்டானேயென்று சமுதாயம் கேள்வி கேட்டுவிட்டால்?

இப்படியொரு சூழ்நிலையில் அவன் மௌனியாகி விடுகின்றான். புனிதபணியை மேற்கொள்ளும் அவன் தலையைச் சிறிது குனிந்து கொள்கின்றான்,

பல ஆசிரியர்கள் பயந்தாங்கொள்ளிகளாக வாழ்வதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்! இவ்வித போக்குகளில் போய்க்கொண்டிருக்கும் இந்த நாளில் வழக்கத்துக்கு மாறாக சில மாணவர்கள் சிந்தித்ததுஒருவிதத்தில் வேடிக்கையாகவும் பெருவியப்பாகவுமே இருந்தது.

சுமார் இருபது பழைய ஆசிரியர்களை ஒன்றாக வரவழைத்து அவர்களது பொன்னான பணியைப் பாராட்டி மாலைசூட்டிக் கேடயங்களையும் அந்தப்புனித கைகளில் கொடுப்பதென்றால், பார்த்துக் கொண்டிருக்க கண்கள் கலங்கிவிட்டன!

நன்றி—அதுதான் எத்தனை புனிதமான, அழியாத பண்பட்ட வார்த்தை.

சைவ சமயமும் தமிழும் சங்கமித்து வளரும் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில்தான் இந்த நிகழ்ச்சியை சென்ற ஞாயிற்றுக்கிழமை நன்கு காணமுடிந்தது.

மழையில் மாணவர்கள் நனையாமல் இருக்க ஓடாய்த் தேய்ந்து ஓடுபோட்டு கல்வியையும் உயிரையும் பேணிக்காத்த பெரியார்களின் சேவையைப் பாராட்ட இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து இவ்விழாவினை எடுத்திருந்தார்கள்.

பாட உணர்வுகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. நன்றிக் கண்ணீர்!ஆசிரியர்களின் திருப்பாதங்களை நனைத்தன, மாணவர் உயர்வுக்கு ஒய்வில்லாமல் உழைத்த குருநாதர்களுக்கு கை கூப்பிய வணங்கங்கள், அன்புத் தழுவல்கள், அப்பப்பா- ஆசிரியர்களுக்கு எமது இன்றைய சமுதாயத்தில் இப்படியொரு மதிப்பா? 'ஏழேழு ஜென்மங்களுக்கும் கல்வி நிற்கும் என்று வள்ளுவர்கூறி பல காலம். மனிதர்கள் இதனையெல்லாம் மறந்தே போய்க் கொண்டிருக்கிறார்கள் என்றே நம்பியிருந்தவர்களுக்கு உண்மையில் இது பெருவியப்பையே அளிக்கும்.

முன்னைநாள் அதிபர் திரு.ச. அம்பிகைபாகன், உப அதிபர் திரு. கா வைரமுத்து, திரு.ரி. சீனிவாசகம் ஆகியோர் பாராட்டப்பட்டவர்களில் சிலர்.

அவர்களது காலத்தில் இந்த மண்டபம் காணாத அறிஞர்கள் குறைவு என்றே சொல்லலாம் என்பதை பேச்சாளர்களில் ஒருவர் குறிப்பிட்டார்.

ஆத்மீகத்துறவிகள், சமயவாதிகள், பேரறிஞர்கள், கல்விமான்கள், பிரபல இலக்கியவாதிகள் எல்லோரும் வைத்தீஸ்வர வித்தியாயமண்டப மேடையில் ஏறி அறநெறியைப் பரப்பியுள்ளார்கள். இவற்றுக்கு ஊக்கசக்தியாக இருந்தவர்கள் மேற்கூறிய ஆசிரியர்களும் மற்றையோரும் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது என இன்னொருவர் பாராட்டினார்.

இத்தனை பாராட்டுக்களையும் பெற்ற ஆசிரியச் செல்வங்கள் சார்பாக முன்னைநாள் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் இரண்டுமூன்று வரிகளில் பெருமையின் பணிவுடன் பேசினார்.

பழச்சுவையாக இனித்தன அவர் வார்த்தைகள்.

அவர் பேசியது இதுதான்.

''நாங்கள் ஒன்றும் அதிகம் செய்துவிடவில்லை.

ஆசிரியர்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டும்.

மாணவர்களுக்கு ஆசிரியர் செய்யும் தொண்டே பெரிய தேசத்தொண்டு.

''எழுத்தறிவித்தவன் இறைவனாவான்'' மீண்டும் அந்த வாசகம் எங்கிருந்தோ கேட்கிறது.

—கணேஷ்

அமிர் மகனுக்கு பதிவுத் திருமணம்

(சுழிபுரம்)

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கத்தின் கடைசி மகன் பகீரதனின் பதிவுத்திருமணம்கடந்தவாரம் இங்கு நடந்தது. இவர் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகத்தில் வைத்தியத்துறையில் பயில்கிறார். மணமகள் மலேஷியா பல்கலைக்கழக விரிவுரையாளர் கே. இராசலிங்கத்தின் புதல்வி.

"கிராமிய சூழலில்தான் சிறந்தஇலக்கியம்உருவாகும்"

(யாழ்ப்பாணம்)

''ஒரு சிறந்த இலக்கியம் கிராமிய சமூகத்தில்தான் உருவாகமுடியும். அங்கே கிராமியப்பண்புகள்தான் இலக்கியத்தின் பண்புகளாகவும் மிளிர்வதை அவதானிக்கலாம்'' என்று இணுவில் வாசகர் வட்டத்தினரால் இணுவில் அ.மி.த. க. பாடசாலை மண்டபத்தில் ''செங்கை ஆழியனின்'' 'காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள்' என்ற நாவல் விமர்சனத்திற்கு எடுக்கப்பட்டபோது கலை இலக்கிய இளைஞர் வட்டத்தின் தலைவர் திரு. துரை எங்கரசு தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில், சிறந்த இலக்கியத்துக்கு அணிசெய்வதாகவும் மெருகூட்டுவதாகவும் கிராமியப் பண்புகளே இருந்துள்ளன, இருந்துவருகின்றன என்றும், இங்கு விமர்சனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நூல் இதற்கு ஒரு உதாரணமாக அமைந்துள்ளது என்றும் கூறினார்.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் இந்நூலை விமர்சனம் செய்கையில், அன்றாடம் நாம் பார்க்கின்ற எங்கள் வீட்டுப் பிரச்னையை, எங்க குடும்பப் பிரச்னையை இந்நூலில் அவதானிக்க முடிகின்றது என்றும், இத்தகைய நாவல்கள் சமுதாயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டார். தொடர்ந்து விமர்சனம் செய்த திரு. வை. கேசவமூர்த்தி ஆசிரியர் கையாண்ட எளிய தமிழ் நடைதன்னை வெகுவாகக் கவர்ந்துள்ளதென்றும், நாவலின் தனிப்பண்பாக அவை அமைந்துவிட்டனவென்றும் குறிப்பிட்டார். திரு. சசி கிருஷ்ணமூர்த்தி விமர்சனம் செய்கையில் இலக்கியத்தின் இலட்சியம் மக்களுக்கு நல்வழிகாட்டுவதாகவே இருக்கவேண்டும் என்றும், இந்நாவலின் மூலம் ஒரு பொறுப்பற்ற குடும்பம் வயதுவந்த பெண்ணுக்கு வழிகாட்டத் தவறியுள்ளதை மக்கள் முன் தீர்ப்பதற்கு விட்டுள்ளார் என்றும், இவ்விலக்கியத்தின் மூலம் எங்கள் சமூகப்பண்பையும் நாவலின் இறுதிவரை காப்பாற்றியுள்ளார் என்றும் கூறினார்.

இறுதியில் பதிலுரை வழங்கிய நாவலாசிரியர் திரு. செங்கை ஆழியன், தான் மக்களுக்காகவே இலக்கியம் படைத்துவருவதாகவும், தொடர்ந்தும் அவ்வாறே தான் நாவல்களைப் படைக்கவுள்ளதாகவும் குறித்துப் பேசினார். (அ)

துப்பாக்கி முனையில் துப்பாக்கி கொள்ளை

[வவனியா]

வவனியாவிலுள்ள ஆண்டியா புளியங்குளம் என்ற இடத்தில்துப்பாக்கியொன்றை துப்பாக்கி முனையில் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்த இடத்திலுள்ள தனது சகோதரியின் இல்லத்தில் இருந்த பிச்சை காசி முஹமட் என்பவரிடமிருந்தே இத்துப்பாக்கியைக் கொள்ளையடித்ததாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவில் வீட்டுக்கதவைத் தட்டும் சத்தம் கேட்டபோது குறிப்பிட்ட நபர் தனது அனுமதிப்பத்திரம் பெற்ற துப்பாக்கியுடன் வெளியே வந்ததாகவும் வெளியே நின்ற சில இளைஞர்கள் அத்துப்பாக்கியைப் பறித்துச் சென்றதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்பது இளைஞர்கள் வெளியே நின்று கொண்டிருந்தார்களாம். ஒருவர் துப்பாக்கியையும், மற்றையோர் இரும்புக்கம்பிகளை வைத்துக் கொண்டிருந்தார்களாம்.

இதுவரை எந்த வேலையும் நடக்கவில்லை

(மானிப்பாய்)

யாழ். பஸ் நிலையத்துக்கருகில் மலசலகூடம் கட்டுவதற்கென ஒதுக்கப்பட்டு, சுற்றிவர வேலியும் போடப்பட்டுப் பல மாத காலமாகியும் எந்த ஒரு வேலையும் இதுவரை நடைபெற்றதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் எந்த ஒரு வேலையும் இழுபறியில்லாமல் நடைபெறுவதில்லையென்பதற்கு இது ஒரு உதாரணம் என்று வரியிறுப்பாளர் ஒருவர் கவலையோடு சொல்லுகிறார்.

பிரான்பற்றில் வீடு தீக்கிரை

[பண்டத்தரிப்பு]

இரவு வேளையில் பிரான்பற்றிலுள்ள வீடு ஒன்று விஷமிகளினால் தீக்கிரையாக்கப்பட்டது. பண்டத்தரிப்பு பிரான்பற்றைச் சேர்ந்த முத்தையா என்பவரின் வீடே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

பெருந்தொகையான வெங்காய முடிச்சுக்களும், துணிமணிகளும் எரிந்ததினால் சுமார் 10 ஆயிரம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது. இதுபற்றி காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டதை அடுத்து பொலிசார் விசாரணை நடாத்தி வருகின்றனர்.

(கி)

வெளிச்ச வீடு பழுது மீனவர் அவதி!

(பண்டத்தரிப்பு)

மாதகல் துறை கடற்கரையிலுள்ள வெளிச்ச வீடு கடந்த மூன்று மாதங்களாக பழுதடைந்துள்ளது.

இதனால் இத்துறையிலிருந்து கடற்றொழிலுக்குச் செல்லும் சுமார் 250 படகுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த வெளிச்ச வீட்டை விரைவில் திருத்தி நடவடிக்கை எடுக்குமாறு கோரி மாதகல் கடற்றொழில் விரிவாக்கச் சேவைச் சங்கத்தின் செயலாளர் திரு வி.அருந்தவம் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர், யாழ் மவேட்ட கடற்றொழில் விரிவாக்க அதிகாரி யாழ் மின்சாரபொறியியலாளர் ஆகியோருக்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கையில் 20 லட்சம்
வானொலிகளுக்கு லைசென்ஸ் இல்லை!

(கொழும்பு)

இலங்கையில் இருக்கும் வானொலிப்பெட்டிகளில் 30லட்சத்துக்கு லைசென்ஸ் உள்ளன; 20 லட்சத்துக்கு லைசென்ஸ் இல்லை''-என்று வானொலிகேட்போர் ஆய்வுக்குழு இயக்குனர் திரு. நந்தன கருணநாயக்கா கூறினர்.

இலங்கை வானொலி ஆய்வுக் கட்டுரை எழுதிப் பரிசுபெற்றவர்கள் குமாரதுங்கா கலையகத்தில் வானொலி கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஏமன்காரிய கரவணை தலைமையில் கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவில் திரு. கருணநாயக்கா வரவேற்புரை நிகழ்த்திய போது தொடர்ந்து கூறியதாவது:

''இந்த வானொலி ஒலிபரப்பு ஆரம்பமான காலத்திலிருந்து நேயர்களிடம் ஆய்வுக்கட்டுரை பெற்றுச் சுமார் 30 ஆயிரம் ரூபாவுக்கு மேல்செலவழித்துப் பரிசளித்துநடக்கும் வைபவம் இதுஒன்றுதான். ஆய்வுக் கட்டுரைகள் 15 ஆயிரத்துக்கு மேல் அனுப்பி வைத்ததோடு பயனுள்ள கருத்துக்களையும் நேயர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இலங்கை வானொலியை உள்நாட்டில் 50லட்சம் பேர்கேட்டு வருகிறார்கள். வெளிநாட்டு நேயர்கள் 30 லட்சம் பேர் கேட்டு வருகிறார்கள். மாதாமாதம் 30 ஆயிரம் நேயர்கள் வரை நிலையத்துக்குக் கடிதம் எழுதி வருகிறார்கள்.

நேயர்கள் இல்லாது வானொலி நிலையம் செயல்பட முடியாது. ஆய்வுக் கட்டுரை மூலமும் நேயர்களிடம் ஒரு விதத்தில் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. இவர் பேசிய பின்னர் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஏமன் காரியக்கரவணை பரிசுபெற்றுரைப் பாராட்டி பரிசுச்சுரிய வானொலிப்பெட்டிகளைப் பரிசளித்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் 57 ஆண்டு கால தொடர்ச்சியான சேவையை நினைவுகூருமுகமாக அகில இலங்கை ரீதியில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் நிகழ்ச்சிகளைக் கேட்டுவரும்வானொலி நேயர்களுச்காக ஒரு ஆய்வுக் கட்டுரைப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்திருந்ததனர்.

1982ம் ஆண்டு ஜனவரிமாத சேவை ஒன்று, சேவைஇரண்டு நிகழ்ச்சிகளைக்கேட்டு அந்நிகழ்ச்சிகள் பற்றி சாதகபாதகமான கருத்துக்கள், சில ஆலோசனைகள் - நிகழ்ச்சிகளை மேலும் அபிவிருத்திசெய்வதற்கேற்ற செயல்திட்டங்கள் என்பவற்றை ஆய்வுக்கட்டுரைவடிவில் தெரிவிக்குமாறுவானொலி மூலமும் பத்திரிகைகள் வாயிலாகவும் கேட்டிருந்தனர்.

மும்மொழிகளிலும் 15,000க்கு மேற்பட்ட ஆய்வுக் கருத்துக்கள் நிலையத்திற்குக் கிடைத்தன.

சிங்களத்தில் அதிதிறமையாக எழுதியோரில் பதினைந்து பேரும், தமிழில் ஒன்பது பேரும், ஆங்கிலத்தில் ஆறு பேருமாக 30 பேர் நாஷனல் வானொலிப் பெட்டிகளைப் பரிசாகப் பெற்றனர். (மானி.நி)

''திருமுறைகளைக் கூட்டாக பாடினால் அருள் கிடைக்கும்''

(சுழிபுரம்)

''இறைவன் அருளைப் பெற்றுக்கொள்ள ஏற்ற இடம் ஆலயமாகும். ஆலயம் சென்றுவழிபட்டால் எல்லா நலன்களும் எமக்குக் கிடைக்கும். அருளாளர்கள் தந்த திருநாமங்கள்-திருமுறைப்பாடல்கள் யாவும் இறைவணக்கத்திற்கு ஏற்ற சாதனங்களாகும். கூட்டாக ஒன்று சேர்ந்து நாங்கள் திருமுறைகளைபாடினால் இறைவன் எம்முன் வந்து காட்சி கொடுப்பார்''.

இவ்வாறு பிரம்மஸ்ரீ சு. சண்முகரத்தினசர்மா சுழிபுரம், பருளை சிவசுப்பிரமணியசுவாமி கோவில் இருபதாவது ஆண்டு பஜனை நிறைவு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

வைத்திய கலாநிதி க. சிவராசா விழாவிற்கு தலைமை வகித்தார். ஆசிரியர் திரு. மு. தம்பியையா பேசுகையில், ''கூட்டுப் பிரார்த்தனையில் கலந்து கொள்பவர்கள் மற்றும் வைபவங்களில் கலந்துகொள்பவர்கள் புத்தகம் பார்த்து பாடல்களைப் படிப்பதைத் தவிர்க்கவேண்டும். மனனம் செய்து படிப்பதுதான்சாலவும் பொருத்தமாகும். கந்தரனுபூதிப் பாடல்கள் யாவும் மனனம் செய்து படித்தால் நல்ல பயன் கிடைக்கும்'' என்றார்.

ஆசிரியர் கேனு.நடராசாபேசுகையில், கூட்டுப் பிரார்த்தனை இறைவனுடன் ஒன்றுபடுத்தும் சக்தியுடையதாகும். இறை இன்பம் கிடைக்கச்செய்வதாகும்'' என்றார்.

ஆசிரியர் அ. கந்தையா, வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபைசெயலாளர் திரு.க. வாமதேவன், திரு.மா.பொன்னுச்சாமி, திரு. பொ.சித்திரம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் பேசினர். இறுதியில் கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெற்றது.

அ. இ. சமாதான நீதவான்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியைசேர்ந்த திரு. நாயகம் சிற்றம்பலம் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கிளிநொச்சி நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

திரு. நாயகம் சிற்றம்பலம் தமிழினத்தின் நல்வாழ்விற்காகவும் கிளிநொச்சியின் அபிவிருத்திக்காகவும் அயராது பாடுபட்டு வருபவர். முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக இருந்த இவர் அண்மைக்காலமாக அரசியலிருந்து ஒதுங்கி சமூக சேவையே மூச்சாகக் கொண்டு உழைத்து வருகிறார்.

மாங்குளம் பால் சேகரிப்பு நிலையத்தின் சேவை

(துணுக்காய்)

கிராமிய தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சின் ஆதரவுடன் மாங்குளத்தில் நிறுவப்பட்டிருக்கும் பால் சேகரிப்பு நிலையத்தில் பால் சேகரிக்கும் அளவு தினமும் கூடிக்கொண்டு வருவதாக அதன் முகாமையாளர் தெரிவித்தார்.

வவனிக்குளம், பாண்டியன்குளம், துணுக்காய், யோகபுரம் பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்போர் சங்கங்கள் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியினால் கால்நடை வளர்ப்போர் தொகை அதிகரிக்கப்பட்டதுடன் இவர்களின் அன்றாடப் பால் சேகரிப்பை ஒவ்வொரு கிராமமாக ஒவ்வொருவர் சென்று சேகரித்து மாங்குளம் கொண்டுசென்று ஒப்படைத்து பின்பு அவர்களின் வீடுகளுக்குப் பணத்தையும் கொண்டு வந்து கொடுத்து சேவைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் திட்டத்தினால் யோகபுரம் மிருக வைத்தியர் திரு. க. சிவலோகநாதன் கால்நடை வளர்ப்போரின் பாராட்டைப் பெற்றுள்ளார்.

★ பாவனையாளர் முறைப்பாடு:
விலைப்பட்டியல் தொங்கவிடப்பட்டன

[பண்டத்தரிப்பு]

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பிரிவிலுள்ள இறைச்சிக் கடையில் விலைப்பட்டியல் எதுவும் தொங்கவிடப்படாத நிலையில் அதிகரித்த விலைகளில் விற்கப்படுவதாக பாவனையாளர்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து உப அலுவலக அதிகார மளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. ஏம். மயில்வாகனம் மேலிடத்திடம் தொடர்பு கொண்டு எடுத்த முயற்சியினால் புதிய விலைப்பட்டியல் தொங்க விடப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு கிராமோதய சபைத்தலைவி திருமதி பேர்ளி அத்தனசியாரும் விலைப்பட்டியல் எதுவும் தொங்கவிடாதிருந்தது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தது குறிப்பித்தக்கது. இறைச்சிக்கான புதிய கட்டுப்பாட்டு விலைகள் இந்த விலைப்பட்டியலில் பொறிக்கப்பட்டுள்ளது.

எலும்பு இல்லாத ஆட்டிறச்சியின் விலை ஒரு கிலோ 45 ரூபாய் எலும்பு சேர்ந்த ஆட்டிறச்சியின் விலை ஒரு கிலோ 35 ரூபாய் எலும்பு இல்லாத மாட்டிறைச்சியின் விலை கிலோ 24 ரூபாய் எலும்பு சேர்ந்த மாட்டிறச்சியின் விலைகிலோ 19 ரூபாய்.

ஜப்பானில் நமது சிறுவர்களின் சித்திரங்கள்!

[புலோலி]

ஜப்பானில் நடைபெறும் சிறுவர் சித்திரக்கண்காட்சிக்கு வலிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு மாணவர்களின் பத்துப் படங்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன.

ஜப்பான் யுனெஸ்கோ நிறுவனத்தினுல் நடாத்தப்படும் உலகச் சிறுவர் சித்திரக் கண்காட்சியிலேயே வலிகிழக்கு மாணவர்களின் சித்திரங்களும் இடம் பெறப்போகின்றன. வலிகிழக்கு யுனெஸ்கோ கழகம் இச்சிறுவர் சித்திரக் கண்காட்சிக்கென இப்பகுதி மாணவர்களிடம் இருந்து உள்ளகப் போட்டிக்கு வந்த 55 சித்திரங்களில் பத்துச் சித்திரங்களைத் தெரிவு செய்தது. தெரிவு செய்யப்பட்ட இப்பத்துச் சித்திரங்களும் ஜப்பானுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டது என்று வலிகிழக்கு யுனெஸ்கோ கழகச் செயலாளர் தெரிவித்தார்.

அடிக்கல் நாட்டப்பட்டது

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் 'வட்டு-தொண்டைம்' தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ஆறுலட்சரூபா செலவில் அமைக்கப்படவுள்ள மாடிக்கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த வாரம் நடைபெற்றது. யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல்லைச் சம்பிரதாய முறைப்படி நாட்டி வைத்தார். வட்டு லயன்ஸ் கழகத் தலைவர் திரு. இ.விஜயரத்தினம்தலைமையில்நடைபெற்ற இவ்வைபவத்தில் யாழ்ப்பாணத்தொகுதி எம். பி. திரு. வி. யோகேஸ்வரனும் கலந்து கொண்டார். சித்தங்கேணி-வட்டுக்கோட்டை வீதியில் இக்கட்டிடம் நிறுவப்படவுள்ளது. (அ)

கொடித்தினம்

(துணுக்காய்)

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுசபை இலங்கையில் கூட்டுறவுக் கல்வி விஸ்தரிப்புக்கு என ரூபா 5 லட்சம் நிதியைத் திரட்டுவதற்கான கொடி விற்பனையை 2-7-83 தொடக்கம் இலங்கை பூராவும் ஆரம்பித்துள்ளது.

இவ்விற்பனைதொடர்ச்சியாக இரு வாரங்கள் நடைபெறும். யாழ். மாவட்டத்தின் இக்கொடி விற்பனை வைபவம் கடந்த 2ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் கொடியை ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுசபை யாழ்.மாவட்ட தலைவர் திரு.சி. சிவமகாராசாவும் யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. க. ஞானப்பிரகாசமும் விற்பனை செய்து ஆரம்பித்துவைத்தனர். (கி)

கற்பகவிநாயகர் இராஜகோபுர வேலைகள்

(நீர்வேலி)

உரும்பராய் கற்பகவிநாயகர் ஆலயத்திற்குச் சுமார் 55 அடி உயரமான இராஜகோபுரம் அமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இவ்வேலைகளின் சில பகுதியை இப் பகுதியிலுள்ள கணேசா சனசமூகநிலைய இளைஞர்களும், உரும்பராய்வடக்கு ஐங்கரன் விளையாட்டுக்கழக உறுப்பினர்களும்ஆலயதொண்டர் சபையினரும் சிரமதானமூலம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் இக்கோபுரம் அமையவிருக்கின்றது. (கி)

இடமாற்றம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பிரதம எழுதுவினைஞராகப் பணியாற்றிய திரு எஸ். தியாகராஜா வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார்.

யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

குறெஸ்ட்ரவல் சேவிசஸ்[பிறை]லிமிட்.

05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA)

போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்

மற்றும் பிரயாண ஒழுங்குகள் எதுவானாலும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்...

CROSS TRAVEL SERVICES (PVT)LTD.

Approved Passenger Sales agent in Sri LanKa M/s

swissair

Stage II Modern Market Ist Floor

BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

சாந்தி யாழ்.
தினசரி 3 காட்சிகள்
கடைசி வாரம்
தியாகம்
(கலர்)

ராஜா (யாழ்நகர்)
படம் பார்ப்பவர்களின் வசதியை முன்னிட்டு காட்சி நேரங்கள் பின்வருமாறு:-
10-30, 1-30, 6-00
பாக்கியராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம் நடித்த

அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன் பாக்கியராஜ்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15, 7-00
சனி, ஞாயிறு 1-30
சிவகுமார்-சரிதா
வண்டிச்சக்கரம்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
கடைசி சில தினங்கள்
நீரும் நெருப்பும்
அடுத்த வெளியீடு துணை

28-7-83 வரை மட்டும்
மனோகரா (யாழ். நகர்.)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன்-ஸ்ரீதேவி
வாழ்வே மாயம்
(ஈஸ்மன்கலர்)

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-00
(யாழ்ப்பாணம்)
ரஜனிகாந்த்— காளி

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
பிரதாப்— சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
மன்னவன் வந்தானடி

ராணி தினசரி 10-30, 2-30, 6-15 மட்டும்
(யாழ். நகர்)
ஜனத்திரள் நிறைந்த 9-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

றீகல்-Regal தினசரி 10-30, 2-00, 4-30 7-15 P. M.
இன்னும் 6 தினங்கள் மட்டும்
கபீர்பேடி....சலும் சூரி... நடிக்கும்
"கேர்ல் (f)ப்ரம் இந்தியா"
GIRL FROM INDIA
TECHNICOLOR
வயது வந்தவர்கள் மட்டும்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - மஞ்சுளா - லதா
உலகம் சுற்றும் வாலிபன்
21-7-83 முதல் சிவாஜி-முத்துராமன்-விஜயா
நெஞ்சிருக்கும்வரை
விரைவில் வருகிறது
ஆனந்தராகம்

இன்றைய பலன்

ஆடி 3ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(19—7—83)

மேடம்: பொன்னை வாழ்வு பெண்ணாலே கிட்டும் கண்ணியம் கடைவிரிக்கும் கடமையும் சிறக்கும் புதிய சூழ்நிலை உங்களுக்கு புத்துணர்ச்சியைத்தரும் பெரியவர்களின் ஆதரவுஉண்டு

இடபம்: பொருளாதாரநிலையில் நெருக்கடி தோன்றும் புதிய முதலீட்டைத் தவிர்க்கவும் தொழில் புரியும் இடத்தில் போட்டி மனப்பான்மையைத் தவிர்க்கவும்.

மிதுனம்: தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள் சுற்றுலாவில் மதிப்பு உயரும் புண்ணிய ஸ்தலமொன்றிற்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம் தெய்வத்தின்துணைஉண்டு

கடகம்: இதயங்கள் இணைவதற்கு இன்று நல்லநாள் அபிப்பிராய பேதங்கள், மறையும் பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் இனபந்துக்களின் ஆதரவு பெருகும்.

சிங்கம்: வேண்டியஅளவுக்கு இன்று வெள்ளிப்பணம் துள்ளும் புதிய நண்பர்களைத் தேடிக் கொள்வீர்கள் நீண்டநாள் கனவு இன்று நனவாகும் சகல துறையிலும் முன்னேற்றமுண்டு.

கன்னி: பொருளாதார நிலையில் நெருக்கடி தோன்றும் குறை கேட்க நேரிடும் கடமையில் தடை தோன்றும் பலவழிகளிலும் பணம் செலவாகும் கரும்புபோல் இனித்தவை வேம்பு போல் கசக்கும்.

துலாம்: உள்ளத்தின் அடித்தளம் ஊமைக்கண்ணீர் வடிக்கும் குடும்பத்தில் தொல்லைகளுக்கு இடமுண்டு சிலரின் புனைந்துரைகளால் மனது புண்படும்.

விருச்சிகம்: எதிர்காலம் இன்று பிரகாசமடையும் தொழில்துறையில் மனதுக்கேற்ற வண்ணம் மாற்றங்கள் இடம்பெறும் முன்னாள் மேலதிகாரி ஒருவர் உங்கள் வெற்றிக்கு துணை நிற்பார்.

தனு: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும் இதயப்படுதாவில் இளமை நினைவுகள் வேதனையைத் தரும் ஆனந்தமும் ஆத்திரமும் கலந்த நிலையில் அவதிப்படுவீர்கள்.

மகரம்: நீண்ட பயணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம் தாய் வழிமூலம் பொருள் வரவுக்கு இடமுண்டு விவசாயிகள் விளைபொருளுக்கும் விருத்திக்கும் இடமுண்டு.

கும்பம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள் அரசியல் வாதிகளுகு நல்ல ஆதாயம் கிடைக்கும் உறவு முறைகள் பலப்படும் மக்கள் செல்வாக்கு மனதைக் கவர வைக்கும்.

மீனம்: ஆமை வேகத்தில் காரியங்கள் நடைபெறும்பகைவர்களின் சூழ்ச்சிகள் பலமாகும் காணித் தொல்லையினால் கடன்பட நேரிடும் குடும்பத்தில் இடைக்காலப் பிரிவுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

படகுசேவைக்குப் பாராட்டு

(நெடுந்தீவு)

வடபிரதேச இயந்திரப் பொறியியலாளரின் நிர்வாகத்தில் நெடுந்தீவு — குறிகாட்டுவான் அரச மோட்டார்படகுச் சேவை சிறந்தமுறையில் நடைபெற்று வருவதாகவும், பொதுமக்களுக்கு வசதியான படகுச் சேவையை நல்ல முறையில் நடாத்திவருவதன் மூலம் எமது மக்களின் கஷ்டங்கள் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்து வடபிரதேச இயந்திரப் பொறியியலாளர் திரு. என். நித்தியானந்தனைப் பாராட்டுவதுடன் இராஜேஸ்வரி மோட்டார் படகையும் சிறந்த முறையில் புனரமைத்து எமது மக்களுக்கு மேலும் வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அவரைக் கேட்பதெனவும் நெடுந்தீவு மத்தி கிராமோதய சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திரு. அ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் நெடுந்தீவு பஹாய் இயக்கத் தலைவர் திரு. கா. குலேந்திரன் மேற்படி தீர்மானத்தைச் சமர்ப்பித்தார்.

(அ)

சிங்கப்பூருக்கு கடலட்டை! பங்களாதேஷுக்கு சங்கு!!

ஆனைக்கோட்டை சங்கத்தின் சாதனை

(பண்டத்தரிப்பு)

ஆனைக்கோட்டைசாவற்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒருலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதி மிக்க கடலட்டைகளை சிங்கப்பூருக்கும், ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதி மிக்க சங்குகளை பங்களா தேசத்திற்கும் வடமாகாண கடற்றொழிலாளர்கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்திற் கூடாக அண்மையில் ஏற்றுமதி செய்துள்ளது.

மேற்படி சங்கத் தலைவரும், யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க சேவைச் சங்கங்களின் சமாஜத்தின் கௌரவ செயலாளருமான திரு எல்.பி. பிலிப் இத்தகவலை தெரிவித்தார். இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலப்பகுதியில் இப்பகுதி கடற்றொழிலாளர்களின் நலன்கருதிபல்வேறு விதமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. என்றும் வெளிநாடுகளுக்கு கடலட்டைகளையும் சங்குகளையும் சேகரித்து ஏற்றுமதி செய்வதால் பெருந்தொகையான பணத்தை அந்நிய செலாவணியாக பெறக்கூடியதாக இருக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அங்கத்தவர்களின் இருல்களைக் கொள்வனவு செய்து அதை வெளியாருக்கு விற்று அங்கத்தவர்களுக்கு இலாபத்தைப் பெற்றுக் கொடுத்து வருவதாகவும், இருல்களை பதப்படுத்தி பக்கற்றில் அடைத்து விற்பனை செய்யவும் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகவும் திரு பிலிப் மேலும் தெரிவித்தார்.

கணேசபுரம் காந்தீயம் பண்ணையில்ராணுவசோதனை!

(வவனியா)

வவனியா பகுதி கூழாங்குளத்திலுள்ள கணேசபுரம் காந்தீயம் பண்ணையில் இராணுவத்தினர் சோதனை நடாத்தினர்கள்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவில் இரண்டு டிரக்குகளில் வந்த நூற்றுக்கு மேற்பட்ட ராணுவத்தினர் பண்ணைக்குள் நுழைந்து சோதனையிட்ட தோடு அங்கு பணியாற்றுபவர்களை விசாரித்தனர்!

இராணுவத்தினர் மிகுந்த சோதனையின் பின்னர், அழகராசா என்பவரை தம்முடன் அழைத்துச்சென்றனர்.

வவனியாப் பகுதியிலுள்ள பெரியதம்பனையிலும் பஸ் தீக்கிரை!

(வவனியா நிருபர்
ரி. விவேகராசா)

வவனியாவிலிருந்து பதினைந்து மைல் தூரத்திலுள்ள பெரியதம்பனை என்ற இடத்தில் இ. போ. ச. பஸ் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது!

வவனியாவிலிருந்து பெரியதம்பனை என்ற இடத்துக்குச் சென்ற பஸ், அங்கிருந்து மீண்டும் வவனியா நோக்கித் திரும்பிய, சற்றும் நேரத்துக்கெல்லாம், இந்த பஸ்ஸுக்கு பெற்ரோல் ஊற்றித் தீவைக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் மாலை 5-30 மணியளவில் இச்சம்பவம் நடந்தது.

வீதிக்குக் குறுக்கே நின்ற நான்கு இளைஞர்கள் பஸ்ஸை மறித்தார்கள்; பிரயாணிகள் எவரும் பஸ்ஸுக்குள் இருக்கவில்லை. சாரதியையும், கண்டக்டரையும் துப்பாக்கிமுனையில் இளைஞர்கள் இறக்கினர்கள்!

கண்டக்டரிடமிருந்த 1500 ரூபாய் ரொக்கப்பணத்தைப் பறித்தனர்! பின்னர், பெற்ரோலை பஸ்மீது ஊற்றினர்கள். தீவைத்தார்கள்!

பஸ் முற்றுமுகத் தீக்கு இரையானது.

பஸ் சாரதி எஸ். மரியதாஸும், கண்டக்டர் செல்வமும் வவனியா பொலிசில் புகார் செய்தனர்.

பொலிஸார் ஸ்தலத்துக்கு வந்து விசாரணை நடாத்தினர்கள்.

'சிவா'வின் பிறந்ததினம் நாளை

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவரும் நல்லூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. மு. சிவசிதம்பரத்தின் 61வது பிறந்ததினம் நாளை 20ந் திகதியாகும்.

இம்முறை திரு. மு. சிவசிதம்பரம் தமது பிறந்த தினத்தை மிகவும் அமைதியாகவே கழிக்கவுள்ளார். நல்லூர்த் தொகுதி த. வி. கூ. பொதுச்செயலாளர் திரு. பெ. கனகசபை இதுபற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில், "திரு. சிவசிதம்பரம், தமிழ் மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில் தமது பிறந்ததினத்தை ஆடம்பரமாகக்கொண்டாடவிரும்பவில்லை. சாதாரண தினம் போன்றே இத் தினத்தையும் அவர் கழிப்பார்" என்று தெரிவித்துள்ளார்.

(கி)

மறவன்புலோ அம்பாள் வெற்றி

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ மத்தி அம்பாள் விளையாட்டுக்கழகமும், தனங்கிளப்பு ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகமும் கலந்து கொண்ட சினேகிதபூர்வமான தாச்சிப் போட்டியில் மறவன்புலோ மத்தி அம்பாள் விளையாட்டுக்கழகம் ஆறுபுள்ளியும், தனங்கிளப்பு ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகத்திற்கு ஒரு புள்ளியும் பெற்றுக்கொண்டன மத்தியஸ்தராக சி. திருநாவுக்கரசு பெ. வைத்தியலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர்.

திருநாள் உற்சவம்

(மன்னார்)

மன்னார் - பண்டிவிரிச்சான் மரியகொறட்டி ஆலய வருடாந்த திருநாள் உற்சவம் கொண்டாடப்பட்டது.

வருடாந்த திருநாள் திருப்பலிப் பூசையை பங்குத்தந்தை அருட்திரு நோபட், அருட்திரு ஜெரோம் லெம்பேட் ஆகியோர் இணைந்து ஒப்புக் கொடுத்தனர்.

தொடர்ந்து புனித மரியகொறட்டி திருச்சொரூப சுற்றுப் பிரகாரமும் இடம்பெற்றது.

யாழ். நகர் புடவைக்கடையில்

ரூ. 1 லட்சம் இந்திய துணிகள் சிக்கின

(சுண்டிக்குளி)

இரகசியத்தகவல் ஒன்றை யடுத்து யாழ். நகரிலுள்ள புட வைக்கடை யொன்றை யாழ். சுங்கத் தடுப்பு அதிகாரி திரு. எஸ். ஜயந்தவீரசேகரதலைமை யிலான சுங்கக்கோஷ்டியினர் சோதனையிட்டபோது அக் கடையினுள் ஒருலட்சம் ரூபா பெறுமதியான இந்தியத்துணி வகைகள் இருக்கக்கண்டுபிடிக் கப்பட்டன.

இவை கடத்தல் பொருட் கள் எனச்சந்தேகிக்கப்பட்ட தால் யாழ். சுங்கதலைமைக்களத் தில் ஒப்படைக்கப்பட்டன. அக்கடை உரிமையாளர் இவற் றில் சிலவற்றிற்கு பற்றுச்சீட் டுக்கள் காண்பித்ததால், மிகு திப்பொருட்களை பறிமுதல் செய்ய உத்தரவிட்ட யாழ். சுங்க சேகரிப்பாளர் திரு. எஸ். கனேஸ் நாற்பத்து ஆறுயிரம் ரூபா அபராதமும் விதித்தார்.

"வட்டமேசை மகாநாடு கண்துடைப்பு நடவடிக்கை"

'குமார்' அறிக்கை

(கொழும்பு)

''ஜனதிபதியினால் கூட்டப் படும் வட்டமேசை மகாநாடு என்று கூறப்படும் பயங்கரவா தத்தை ஒழிப்பதற்கான மகா நாட்டிற்கு அரைவாசிக்கும் மேற்பட்ட கட்சி கள் அழைக்கப்படவில்லை. அண் மைக் காலத்தில் இலங்கையின் நற்பெயர் உலகநாடுகளில் மங் கியிருக்கிறது''

இவ்வாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் வட்டமேசை மகாநாடு தொடர்பாக வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரி வித்துள்ளார்.

அவர் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதா வது:-

''இலங்கையின் நற்பெயரை மீண்டும் பெறுவதற்காக கண் துடைப்பு நடவடிக்கையாகவே இந்த மகாநாடு கூட்டப்படு கிறது.

''தமிழ் மக்களின் அடிப்ப டைப் பிரச்னைகளின் வடிவமே வன் செயல்கள். தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச் னைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

''இந்நாட்டு மக்களையும், வெளிநாடுகளையும் ஏமாற்றுவ தற்காகவே இம்மகாநாடு கூட் டப்படுகிறது. பாராளுமன்றத் தில் அங்கம் வகிக்கும் கட்சி களை மட்டும் அழைத்து, இம் மகாநாட்டை கூட்டுவதென் றால் பாராளுமன்றத்திலேயே இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாணலாம்'' (இ-வெ

பஸ்ஸில் விசாரணை;

[சுண்டிக்குளி]

யாழ். நகரில் இருந்து பருத் தித்துறை நோக்கிச் சென்ற பஸ் ஒன்றை வல்லை என்ற இடத்தில் சோதனையிட்ட ஆயு தப்படையினர் அதனுள் மண் ணெண்ணை டின் ஒன்றைக் கண்டுபிடித்தனர். அதைக் கொண்டு சென்றவர் விசார ணைக்குட்படுத்தப்பட்ட பொழுது, அதை விலைக்கு வாங்கிச் செல்வதாகக் கூறிய தையடுத்து விடுவிக்கப்பட் டார். (க)

கடற்றொழிலாளர் பாதிப்பு

[சுண்டிக்குளி]

வடக்கே தற்போது நில வும் எரிபொருட் தட்டுப்பாடு மீனவர்களையும் பாதித்துள் ளது. சிலர் எரிபொருள் தட் டுப்பாட்டால் தொழிலைக் கைவிடவேண்டியும் உள்ளது. இதனால் மீன், கருவாடு விலை ஏறக்கூடிய சூழ்நிலையும் ஏற் பட்டுள்ளது.

இதனால் இங்கிருந்து வெளி யிடங்களுக்கு மீன், கருவாடு போகமுடியாத நிலையும் ஏற் படலாம்.

[க]

மாணவர்களை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நடேஸ்வரன், தா. தாமோ தரம்பிள்ளை, க. வாமதேவன் உட்பட மற்றும்பலர் பேசினர்.

கலை நிகழ்ச்சிகளும் நடை பெற்றது. விளையாட்டுப்போட் டியில்வெற்றிபெற்றவர்களுக்கு திரு. கா. சந்திரராசா பரிசில் களை வழங்கினர்.

புதைக்கப்பட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் ஆகியோர் ஆஜராளர்கள்.

புதைக்கப்பட்டுள்ள சடல த்தை மீண்டும் தோண்டி எடு த்து அடையாளம் காண அனுமதி வழங்கும்படி தாயா ரான முத்துலட்சுமி விண் ணப்பித்தார்.

இதைத் தொடர்ந்து நீத வான் சடலத்தை தோண்டி எடுக்குமாறு யாழ். வைத்திய அத்தியட்சகருக்கு பணித்துள் ளார்,

அடையாளம் காணப்பட்ட பின், சமயாசாரப்படி இறுதி மரியாதை செய்ய சடலத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு இன்று காலை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் இற ந்தவரின் தாயாரான முத்து லட்சுமி மனுவொன்றை தாக் கல் செய்ய ஏற்பாடு செய் திருக்கின்றார். (க)

சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையின் கொழும்பு தலைமையகத்தில் நேற்று இழுக்கப்பட்ட 939-வது தேசிய சுவீப்பின் முதல் மூன்று பரிசுகளும் வரு மாறு!

1-ம் பரிசு:

04 C 0072

ரூ. 1 லட்சம்

2-ம் பரிசு:

14 V 0149

ரூ. 60,375

3-ம் பரிசு:

01 P 0590

ரூ. 20,125

சுதந்திரக்கட்சி கலந்து கொள்ளாது

(கொழும்பு)

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவினால் கூட்டப் படவுள்ள வட்டமேசை மகா நாட்டில் கலந்துகொள்வதில்லை யென்று சிறீலங்கா சுதந்திரக் கட்சி நேற்றுத் தீர்மானித்துள் ளது.

இதுதொடர்பாக இக் கட்சி யின் நிர்வாகக்குழு ஜனதிப திக்கு இன்று கடிதமொன்றை அனுப்பி வைக்கவுள்ளது.

(இ-வெ)

எரிபொருள்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டவாறுதெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது, போக் குவரத்து தடையினால், டீசல் பெற்றோல், மண்ணெண்ணை விநியோகம் பெருமளவில்பாதி க்கப்பட்டுள்ளதை அறிவீர் கள்.

'பின்போட முடியாத அத் தியாவசிய தேவைகளுக்கு மட் டும், நாம், 'பர்மிட்' வழங்கி வருகின்றோம். அரசாங்க ஊழி யர்கள், காரியாலங்களுக்கு செல்வதற்கு வேறுவழிகளை பாவிப்பதுடன், உத்தியோக பூர்வமான பயணங்களுக்கும் வேறு வழிகளை பாவிக்க வேண் டும்.

'வாகனங்கள் பழுதடைந் தால், பரீட்சைகள் நடத்து தல், வைத்திய அதிகாரிகளின் அவசர அழைப்புகள் போன்ற அவசர தேவைகளுக்கு தொட ர்ந்து கட்டுப்பாடான விதத் தில் எரிபொருள் கையிருப் பில் இருக்கும் வரை தொட ர்ந்து 'பர்மிட்' வழங்கி வரு வோம்.

இப்படியான கட்டுப்பாட் டின் மத்தியிலும் சில நாட்க ளுக்கு மட்டுமே, விநியோகிக்க கூடிய எரிபொருளே கையிருப் பில் உள்ளது.

அரசாங்க திணைக்களங்கள் தங்கள் எரிபொருள் தேவை களுக்கு சொந்த ஏற்பாடுகளை செய்யவேண்டும்.

'பௌசர்களை' சொந்தமாக வைத்திருக்கும் திணைக்களங் களும் பௌசர்களை வேறுஇடங் களிலிருந்துபெறக்கூடியதிணைக் களங்களும் அநுராதபுரம் மொத்த விற்பனை நிலையத்தில் அல்லது கொழும்பில் தங்க ளுக்குத்தேவையான எரி பொருளை பெறுவதில் எவ்வித சிரமமும் எடுக்கதேவைப் படாது.

பெரும் வாகனங்களைச் சொந்தமாக வைத்திருக்கும் மற்றும் திணைக்களங்கள் 'பரல் கள்' மூலம் தங்களுக்குத் தேவையான எரிபொருட்களை அனுராதபுரத்தில் அல்லது கொழும்பில் பெற்றுக்கொள் ளலாம்.

இவ்வசதிகள் இல்லாத இலாகாக்கள், எரிபொருட் களை யாழ். மாவட்டத்தில் அதிக விலைக்குப் பெறவேண் டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

[க]

'நடா' ராஜினாமாக் கடிதத்தை கையளித்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் பதவியிலிருந்து ராஜினாமாச்செய்யும்உத்தியோ கபூர்வமான கடிதத்தை திரு. எஸ். நடராசா நேற்று யாழ். செயலகத்தில்வைத்து யாழ். அரசாங்க அதிபரும், மாவட்ட அபிவிருத்தி சபையின் செயலா ளருமான திரு. தேவநேசன் நேசையாவிடம்கையளித்தார்.

திரு. நடராசா தமது உத்தி யோகபூர்வகாரையும் நேற்றுத் திரு. தேவநேசன் நேசையாவி டம் கையளித்தார்.

(வெ)

இராணுவத்தினர் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் பிரதானவீதி களில் இராணுவத்தினர் கவச வண்டிகள் சகிதம் நேற்று ரோந்துபுரிந்தனர்.

கந்தர்மடம், அரியாலை, நாவாந்துறைப் பகுதிகள் நேற்றும் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டது. (மா)

இ.போ.ச.–தனியார்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ்ஓட்டிய வரும், அந்த பஸ்ஸில் பயணம் செய்தவருமே இறந்தவர்கள். அந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த பிரயாணிகளே காயத் துக்குள்ளானார்கள்,

யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பஸ்ஸில் பிரயாணம் செய்தவர்களில் இருவருக்கே சிறுகாயங்கள் ஏற்பட்டன.

தனியார் பஸ்ஸில் வந்தவர் கள் பின்னால் வந்துகொண்டி ருந்த வேறு தனியார் பஸ்களில் யாழ்ப்பாணம் அனுப்பிவைக் கப்பட்டன.

தேசிய அடையாள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் தாமதங்களைத் தவிர்க்கக் கூடியதாக, தமது தேசிய அடையாள அட்டைகளை கொண்டுவருமாறு வேண்டுகி றோம்.''

''மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஒவ்வொரு தொகுதியிலும் விசேஷமாக அழைக்கப்பட்டுள்ள பேராளர் களுக்கான அட்டைகள் புறப் படுவதற்கு முன்னதாகக் கிடைத்தால் அவற்றையும் கொண்டுவருமாறு கேட் கிறோம்.''

நேற்றும் இன்றும் மகா நாட்டு ஏற்பாடுகளை திரு. அமிர்தலிங்கம் கவனித்தார். மகாநாடு நடைபெறும் இடங் களையும் சென்று பார்வையிட் டார்.

மகாநாட்டுக்கு வரும் பேரா ளர்கள் 800 பேருக்கு 22-ம் திகதி முதல் 24-ம் திகதி காலை வரை சாப்பாடு வழங்குவதற் கான ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளன. [க]

தமிழ்ஈழ விடுதலை,..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சலிகள்'' ''தமிழ் ஈழ விடு தலைப் புலிகள்'' எனச் சிவத்த மையினால் எழுதப்பட்டிருந் தன.

மேலும் ஒரு சுவரொட்டி யும் ஒட்டப்பட்டிருந்தது ''தமிழ்ஈழ வேங்கைகள் சிலன், ஆனந்தனைக் காட்டிக்கொடு த்த துரோகிகளைப் பழிக்குப் பழி வாங்காமல் விடமாட் டோம்'' ''தமிழீழ விடுதலைப் புலிகள்'' என்ற சுவரொட்டி களே அவை.

இச்சுவரொட்டிகள் கச்சேரி, முத்திரைச் சந்தை, சங்கிலி யன் சிலையடி, அரசடி, கந்தர் மடம், சாவகச்சேரி ஆகியஇட ங்களில் காணப்பட்டன.

(மா)

ஊரடங்கு தளர்வு

(திருகோணமலை)

திருகோணமலையில் ஊரடங் குச் சட்டம் நேற்று முதல் தளர்த்தப்பட்டுள்ளது. நேற் றுத் தொடக்கம் அங்கு ஊர டங்குச் சட்டம் இரவு 10 மணிமுதல் அதிகாலை 4 மணி வரை அமுலிலிருக்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் விசாரணை

(கரவெட்டி)

அல்வாயைச் சேர்ந்த கே. கங்காதரன் என்பவர் கடந்த வெள்ளியன்று ராணுவத்தின ரால் அழைத்துச் செல்லப்பட்டு சனியன்று விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட் டார். அவர் மீண்டும் புதன் கிழமை விசாரணைக்குவரும்படி கேட்கப்பட்டுள்ளார்.

அடையாளம் காணப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

மீசாலையில் சுடுபட்டுஇறந்த இரு இளைஞர்களில் ஒருவர் இதுவரைஅடையாளம் காணப் படவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

அடையாளம் காணப்பட்ட திருமலை இளைஞரான சீலன் என்றழைக்கப்படும் அன்ரனி யின் சடலமும் மற்ற இளைஞ ரின் சடலமும் யாழ். ஆஸ்பத் திரி பிரேத அறை யில் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளது.

திருமலை வாலிபரான லூக் காஸ் சார்ள்ஸ் அன்ரனியின் தாயாரான திருமதி மரியா செபமாலையும், அவரது மற் றொரு மகனும் குருநகர் ராணு வமுகாமில் விசாரணை செய் யப்பட்டு வருகிறார்கள்.

திருமதி மரியா செபமாலை நேற்றுமுன்தினம்சுகவீனமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச் சையளிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இவர்கள் இருவரும் சட லத்தை அடையாளம் காண் பதற்காக ராணு வத்தினரால் அழைக்கப்பட் டிருந்தது தெரிந்ததே.

இதுஇவ்வாறிருக்க மீசாலை யில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது, தப்பியோடியதாகக்கூறப்படும் இருவரைத்தேடி இராணுவத் தினர்பலத்ததேடுதல்வேட்டை நடாத்தினர்.

கந்தர்மடம், கல்வியங்காடு, நாவாந்துறை, திருநெல்வேலி ஆகியஇடங்களில் குறிப்பிட்ட நம்பர்கொண்ட ஒரு வீடு ஒன் றையும் விசாரித்த தாகவும் கூறப்படுகிறது. (மா)

உப-தபாலகங்களை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செயல்களை அடக்குவதாகக் கூறி இராணுவத்தினர் வன் முறைகளை வரம்புக்கு மீறிப் பாவித்து மக்களை இம்சைப் படுத்துகிறார்கள்.

''திருமலையில் தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்கள். கொலை செய்யப்பட்டார்கள். அங்கி ருந்த தமிழர்களைவிரட்ட ஏகா திபத்திய அரசும் பொலிசாரும் ஆயுதப்படையினரும் முயன்ற னர். இந்தநிலை திருமலையுடன் நிற்கவில்லை. யாழ்ப்பாணத்தி லும் இடம்பெறப்போகிறது. அதற்கான அறிகுறிகள் இப் போது ஏற்பட்டுள்ளது.

''பயங்கரவாதம் என்று சொல்லிக்கொண்டு இளைஞர் களை அழித்தொழிப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கமுடி யாது. அதற்கு உடந்தையாக வும் இருக்கமாட்டோம்.

இன்று பொருளாதாரத் துறையில் தமிழர்களை அடக்க அரசு முயலுகிறது. பெற்றோல் டீசல், மண்ணெண்ணை ஆகிய வற்றை அனுப்பாமல் எமது விவசாயம், கைத்தொழில்களை அழிக்க முயற்சிக்கிறது. இந்த நிலையில் எரிபொருட்களை அதிக விலைக்கு விற்கக்கூடாதென வர்த்தகர்களை கேட்டுக்கொள் கிறேன். (க)

மரண அறிவித்தல்

முத்துத்தம்பி சொர்ணம்மா

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்துத்தம்பியின் மனைவியும், தவரெத்தினம், துரை ரெத்தினம் ஆகியோரின் தாயாரும், திருநாவுக்கரசு, விமலாதேவி ஆகியோரின் மாமியாருமாகிய சொர் ணம்மா காலமாகிவிட்டார். அன்னரின் ஈமக்கிரியை கள் இன்று (19-7-83) பி. ப. 1மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற் றுக்கொள்ளவும்.

76, நாச்சிமார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

8040

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu. Telephone: 22389—24126.